சேர்ந்தநாமெ உ
ஆர்ந்த வேலுமயிலுந்துணை.
சிந்தனை

திருப்பழனிமலைத்தெண்டாயுதக்கடவுள்பேரில்

பின்முடுகுச்

# சந்தக்கொம்மிப்பாடல்

## நூற்பயன்.

கட்டளைக்கலித்துறை.

வேலு மயிலுந் துணையென் பவர்க்கதி வித்தையுண்டா... ... ம்
வேலு மயிலுந் துணையென் பவர்க்குமிருசெல்வமா... ... ம்
வேலு மயிலுந் துணையென் பவர்க்கு வினைகளறு... ... ... ம்
வேலு மயிலுந் துணையென் பவர்க்குயர் வீடெளி ... ... தே.

## காப்பு.

நேரிசைவெண்பா.

சீராருந் தென்பழனிச் செவ்வேள்கொம் மித்தமிழ்க்கு ... ... ... ...*
சீராரும் பாதிரிநன் னிழலுறை — வாராரு ... ... ... ... ... ... *
முத்தணிதனத்தியெழின் மொய்த்தவலை பைக்குரிய ... ... ... ... ...*
அத்திமுக னுற்றதுணை யாம்.... ... ... ... ... ... ... ... ... *

## அவையடக்கம்.

கட்டளைக்கலித்துறை.

கருந்தமெய்யன்பர் கவிமுன்பழனித் தலத்துளென்னுள் ... ...*
நருந்தற்பானுக் கபிஷேகஞ்செய்ய நடாத்துமன்பு ... ... *
மிருந்தன்னக்காவடி முன்பிச்சையேற்றிட வீடுதொறும் ... ...*
புகுந்துவருமன்னக் காவடிபோலுமென் புன்கவியே ... ... *

## கடவுள் வணக்கச் சந்தக்கண்ணி.

இராகம் — உசேனி — தாளம் - சாப்பு.

### சிவதுதி.

தனத்தத்தன—தனத்தத்தன-தனத்தத்தன—தனத்தத்தன
தனத்தத்தன-தனத்தந்தன—தாத்தனு.

மாமேவுதென்பழ னித்தண்ட பாணிமேற் ... ... ... ... *
றேமேவுசந்தக் கொம்மிப்பாட ... ... ... ... *
மணிச்சிற்சபை தனிற்சிற்பர நடத்தைப்புரி ஜெகக்கர்த்தர்த ... ... *
மலர்ப்பொற்கழ லிணைப்பத்திசெய் தேத்துவாம். ... ... (க)

### பார்வதிதேவியார் துதி.

மாமறைபோற்றுஞ் சிவகிரிவேலன்மேற் ... ... ... ... *
பாமேவுகொம்மித் தமிழ்ப்பாட ... ... ... ... ...*

வரப்பிற்பல வருக்கத்துயிர் களைப்பெற்றிடு திறத்துப்பணி ... ... ...*
மலைப்பொற்கொடி துணைச்சிற்றடி போற்றுவாம் ... ... (உ)

விநாயகர் துதி.

புண்ணியனைப்பழ னுபுரிவாழ்சுப்பிர ... ... ... .
மண்ணியனைத்தமி ழாற்பாடப் ... ... ... ... ... *
பொறிக்கட்கய முகற்குத்தளர் சுரர்க்குப்பர சுகத்தைதரு ... *
புஜழக்கைக்கரி முகத்தத்தனை வாழ்த்துவாம் ... ... ... (ரு) *

சுப்பிரமணியர் துதி.

எண்ணியவெல்லாந் தருகுகனைத் தொண்டர்க் ... ... ...
கண்ணியனைப்பாடு தற்கவன்றன் ... ... ... ... ... *
எழிற்பொற்பரி புரச்சிற்றடி யினைத்துப்பயி லினைப்பொறுசிகி ... *
யினைப்பத்தியொ டெளத்திற்ெருழு தேத்துவாம்... ... ... (சு) *

கடவுள்வணக்கச் சந்தக்கண்ணி முற்றியது.—ஆ ௬.

---

கொச்சகம்.

விம்மிப பணைத்தமுலை மென்கொடிவள ளிக்குவர்த ... ... *
நம்பிறைவா தென்பழனி நாதாபுக ழைப்பாடிக... ... ... ... *
கொம்மியடித் தாயிழையார் கூடிவிளை யாடுதற்குத் ... ... *
சம்மிலொரு வரியொருவா தாமழைதகுக் கூறுவரோ ... ...*

நாமமஞ்சரிச சந்தக்கண்ணி.

தனதானன-தனதானன-தனதானன-தனதானன
தனதானன-தனதானன-தானன.

மங்களவல்லி மதனவல்லி செழுங் ... ... ...
குங்குமவல்லி கனகவல்லி ... ... ... ... *
மதபூஷணி சுககாரணி பதுமாவதி கமலாசனி ... ...
மதமோகினி யமராவதி ஜானகி... ... ... ... (க) *

சிங்காரவல்லி சுமுகவல்லி நல்ல ... ... ... ...
லங்காரவல்லி கதம்பவல்லி ... ... ... ... *
ஜெகமோகினி மதனாலய மதலாலனி சுகுணாவதி ... ... ... *
திலதாவதி மதனாகம பூரணி... ... ... ... (உ) *

வேறு.

தந்ததத்ததானன,—இவ்வண்ணமூன்று.

கூந்தலழகி நடையழகி மிகத்... ... ... ... ...
தேய்ந்துதுவண்ட இடையழகி ... ... ... *
கொண்டலொத்தவாரள கம்படைத்தமேனகை ... ... ... *
கொஞ்சுதத்தைவாசகி சாரங்கி ... ... ... (ங) *

சேர்ந்தாராமெல்லாங் கூடிக்கொண்டு புகழ ... ... ...*
ஆர்ந்தவேலன் திருப்பதத்திற்... ... ... ... *
சிந்தைவைத்தாரொடு பின்பமுறறவேயிரு ... ... ...*
செங்கைகொட்டியாடுவம் வாருங்காள்—பெண்காள், முற்றியது. ஆடு ௪.

கொச்சகம்.

முத்தநகை மாதொருத்தி முன்புமுரு காவென்றே ... ... *
அத்தநியிற் றன்பொழிந்தின் பியாவுமுற்ற ஞமுமிஷ்ட... ...*
சித்தியெல்லாம் பெற்றிடலாகு சேலனைய கண்மடவீர் .. ... *
பத்தியொடு வேலர்தமைப் பாடிவிளையாடுவமே.... ... ... *

இது - கவிக்கூற்று.

தனனதநதத் தலனன-இவ்வண்ணமூன்று.

வணங்கிக்கொம்மி யடிக்கின்றார் பெண்கள் ... ... *
இணங்கிகொம்மி யடிக்கின்றார்... ... ... ... *
மணிதுலங்கத்துன்னிய முலைகுலுங்கப்பின்னிய ... ... *
வளையிலங்கக்கொம்மி யடிக்கின்றா.—பெண்கள் ... ... (௧)

ஏகசந்தகொம்மிக்கண்ணி.

பல்லவி.

தனதந்தன-இவவண்ணம் ஆறு.

பாடிக்கொமமி யடியுங்காள ... ... ... பெண்காள்
கூடிககொம்மி யடியுங்காள் ... ... ... ...*
பணியுநதமிழ் முனியின்புற மவுனநதனை யருளுங்குரு ... ... *
பரனெங்கணு முறையுங்கும ரேசனைப... ... ... பாடிக், (௨)

தென்பழனுபுரிச் செங்கரும்பை யென்றன் ... ... ... *
அன்பிலெழுநதிடு மாரமுதைத ... ... ... ...*
தினம்வநதனை புரியன்பாகள் நினைவின்படி யுலகம்புகழ் ... ... *
திருவும்பர கதியநதரு நாதனைப ... ... பாடிக், (௩)

தன்மவசிய குலத்தி லுருததிர .. ... ... ... ... *
சன்மனெனபபெயா பெற்றுவநதே ... ... ... *
தலைவன்றரு மியல்கண்டினை நவிலுந்தமி ழறிவிற்சையா ... ...*
தாமங்குளா விரிவண்டமிழ் வாணனை ... ... வணங்கிக், (௪)

செந்தமிழெல்லை யறிந்தபுலவனைக் ... ... ... ... *
கந்தனைச் சணமுக னைக்குகனைச் ... ... ... *
செறியண்டமொ டகிலங்களு முதவுநதிரி புரசுந்தரி ... ... *
சிவசங்கரி யுமையம்பிகை பாலனைப ... ... பாடிக், (௫)

தநதெய்வ மெந்தெய்வ மென்றெங்கும் பூசிக்க ... ... ... *
எநதச்சமயத்து நின்றவனைச் ... ... ... *

சரணங்கதி யெனநம்பிய வொருமங்கைத னுளம்வெம்பிய ... ... *
தருணந்தனி லுதவுங்கும ரேசனை ... ... வணங்கிக், (௬)

பத்திவலைதனிற் சிக்குஞ்செவ்வேடனைச் ... ... ... ...*
சத்துச் சித்தானந்த மானவனை ப ... ... ... *
பரவுந்தமிழ் வலவன்சிறை யொழியும்படி யசலம்பொடி ... ...*
படவன்றயி லெறியுங்கிருபை யாளனை ப ... பாடிக், (௭)

முத்தனைச் சுத்தனை நித்தியானந்தனை... ... ... ... *
முத்திக்குவித்தாய் முளைத்தவனை ... .. ... ...*
முகிலஞ்சன கமுமஞ்சன விழியுங்குவ டனவிஞ்சிய ... ... *
முலையுந்திக ழுயர்குஞ்சரி பாகனை... ... வணங்கிக், (௮)

ஏனறபுனத்தினி லனறொரு நாட்சிறு ... ... ... *
கானக்குறத்தி பொருட்டாக ... ... ... ... *
இவருந்திரை நரைவந்திடு முதிருங்கிழ வுருவங்கொடு... ... *
இடியுண்டக மகிழ்சுந்தர ரூபனை ப ... ... பாடிக், (௯)

தேனைக்கரும்பைச் சருக்கரையை முரு... ... ... *
கோனைப் பரங்கிரிக் கோமானைத் .. ... ... *
திசைநின்றவர் திகிலகொண்டிட எதிருநதிற லவுணனபடை ... ...*
சிதையும்படி யயிலன்றெறி வீரனை ... வணங்கிக், (௰)

தெள்ளித்தெளிந்த சிவானந்தத்தேறலை ... ... ... *
வள்ளிகுவாய்த்த மணக்கொழுந்தைத் ... ... ... *
திரளும்பர்த மரசின்புறு மனைமங்கல மிடுதநதரு ... ... *
திணிகொணடிட அயிலகொண்டபிர தாபனை ப ... ... பாடிக்; (௰௧)

வெள்ளிப்பொருபபுறை செலவாதஞ்செல்வனை ப ... ... ... *
புள்ளிச்சிறைமயில வாகனனை ... ... ... *
மிளிரும்பர வறிவென்பதி னினைவொன்றிடி னடல்கொண்டெழு ... *
விரிசஞ்சித மிலையென்றரு ளுதனை ... வணங்கிக், (௰௨)

தெய்வசிகாமணி யைத்தொண்டர்செல்வத்தை ... ... *
மைவளர்சோலை மலைக்கரசைத் ... ... ... ... *
திமிரந்தரு புவனங்களு மனமன்றியி லிலையிங்கிது ... ... *
தெளியென்றரு ளியநங்குரு நாதனை ப ... ...பாடிக், (௰௩)

சைவப்பயிர்தழைத் தோங்கச்சமண்களை... ... ... *
கொய்தபரமத வாளரியைத் .. ... ... ...*
தழையுங்கழு மலமென்றுயர் நகாவநதள வறுமண்பர்கள ... *
தனியின்பம தறமுன்பரு ளுதனை ... ...வணங்கிக், (௰௪)

சீரலைவாயுறை யாணிமுத்தை யெங்கள் ... ... ... ... *
ஏரகமேவுங் குருமணியைச் ... ... ... ... *
செழியன்சுர மொடுமுன்புள வினையும்பொடி படவன்பொடு ... *
திருவெண்பொடி யருளுஞ்சிறு பாலனைப் ... பாடிக், (௰௫)

நீர்வளர்குன்றுக டோறும்விளங்கிய ... ... ... ... *
பேர்வளர்தென்றணி கைத்துறையை ... ... ... ...*
நிலைகொண்டிமை யவர்தங்குறை அவுணன்கதி வழிவந்திட ... ... *
நிமலன்றனி விழிவந்தமு யூரனை ... ...வணங்கிக், (௰௬)

ஐயானனத்தர் திருமகனைச்கரு ... ... ... ... *
மையாருமெய்யர் மருமகனை ... ... ... *
அவிருஞ்சர வணமஞ்சம திடையும்பர்க ளுறுவன்றனை ... ... *
யவிழும்படி தவழுஞ்சிறு பாலனைப் ... ... பாடிக், (௰௭)

பொய்யாமொழியார் தமிழ்க்குவந்த எங்கள் ... ... *
வையாபுரியாளுஞ் சீமானைப் ... ... ... *
பொடியென்புமு னணிமங்கையின் வடிவங்கொடு வரவெண்டிசை ... *
புகழ்வண்டமிழ் நவிலுங்கவி ராயனை .. வணங்கிக், (௰அ)

ஏகசந்தக்கொம்மிக்கண்ணி முற்றியது.—ஆ ௰அ.

---

## கட்டளைக்கலித்துறை.

பெருந்தெய்வம்வேடர்தம் மானுக்குந்தெய்வப்பிடிக்குமின்பந் ... *
தருந்தெய்வந்தேவர் சிறைமீட்டதெய்வஞ் சதுர்மறைசொல் ... ... *
அருந்தெய்வம்வேலணி தெய்வமெய்யன்ப ரழைக்குமுன்னம் ... *
வருந்தெய்வமியாந்தொழுந் தெய்வம்பழனி மலைத்தெய்வமே. ... ... *

## கொச்சகம்.

கந்த மணிந்து கனத்திறுமாந் தேபுடைத்த ... ...*
பந்துமுலைக் கெண்டைவிழிப் பைங்கொடிம ருங்குடையீர்... *
சந்ததமு நம்மைத் தடுத்தாண்ட தென்பழனிக் ... *
கந்தன்வரு கின்றானிக் காட்சியைக்கொண் டாடுவமே ... *

## பவனிச்சந்தக்கண்ணி.

பல்லவி.

தனனதன தனனதாம்-இவ்வண்ண மூன்று.

கந்தன்வருகிறான் பாருங்காள் ... ... ... உமை *
மைந்தன்வருகிறான் பாருங்காள் ... ... பெண்காள் *
கருதுமவரிடர்களைந் துறவுலகிலுயர்வதாந் ... ... ... *
கதியுதவவருகிறான் பாருங்காள் .. .... பெண்காள், (க)

வேறு.

தானதனதந்ததன — இவ்வண்ணமூன்று.

அனந்தங்கோடி ரவிமதிபோலொளி ... ... ... *
புனைந்தபன்மணி யாலிழைத்த ... ... ... ... *
ஆறுமகுடங்களொடு விறருள்சுரநதொழுகும் ... ... *
ஆறுமுகமண்டலமு மிலங்கவே ... ... ... கந்தன், (உ)

கனிந்தருண்மடை திறந்தபன்னிரண ... ... ... *
டெனும் பங்கயங்கள துலங்கவே... ... . ... *
காரிருளொதுங்கவரு சூரியர்களெனமுளைசெய . .. *
காதிலணிமின்குழைகள குலுஙகவே . .. கநதன், (௩)

வேறு.

தானதன - ஆறு.

அம்பிகையுமகார்த் திகைபபெண்களுநதரு ... ... .. *
கும்பமுலைபபால மணம்வீசும . ... ... ... *
ஆறுகனி வாயுநறு நீபமலா மாலைபுரள் ... ... . ... *
ஆறிருபு யாசலமு மிலங்கவே ... ... கநதன (௪)

கும்பமுனிமுத லன்பாதொடுத்தநல .. ... .. ... *
இனபச்செழுந தமிழ்மாலையுங .. .. ... *
கோலமணி யாரமுமு நூலுமணி நீடழகு ... ... .. *
கூடிநிறை மாாபிலொளி வீசவே ... ... கநதன, (௫)

வேறு.

தனதன தநனனதன - மூனறு.

அடுத்ததொணடாக் காபபதறகுமுன் ... .. . *
தொடுத்தவீர கஙகணமும்... ... ... .. *
அடலுருத்திராகனொடும் வலியுடைபபடைகளொடும ... .. *
அயிலுடைககரமலரு மொளிரவே ... ... . கநதன, (௬)

தொடுத்திறுக்கிய கச்சையுஞ்செமபட்டும . . .. *
உடுத்த மருங்கு விலஙகவே ... ... . ... *
துதிமிகுததிடுமடிய ரகமலர்த்தவிசிலுறை .. ... ... *
துணைமலாச்சிறு பதமும் விளஙகவே .. ... கநதன, (௭)

வேறு.

தனதனன - ஆறு.

அனபபெடைகட்கு நடைபழக்கிய .. . ... *
இளைப்புனததுறை குமரியும ... ... ... ... *
அதிமதுர நயவசன விபுதர்பதி தருமகளும்... ... ... *
அழகுதர இருபுறமும் விளங்கவே ... ... கந்தன், (அ)

## பின்முடுகுச்சந்தக்கொம்பிப்பாடல்.

அனந்தனெளிக்கப் புவிகுலுங்கநிர்த் ... ... ... *
தனஞ்செய்யும் பச்சை மயிலின்மேல் ... ... ... *
அளவில்பல கிரணவொளி விரியவலை கடலினிடை ... ... *
யணுகியெழு முதயகதிர் போலவே... ... ...கந்தன், (௯)

வேறு.

தானதனதத்ததன-மூன்று.

குக்குடக்கொடியுமாடவேயிரு ... ... ... ... ...*
பக்கமுஞ் சாமரம் போடவே ... ... ... ... *
கோதறுமிசைக்குரிய நாரதர்மகத்திலெழு ... ... .. *
கோரதகரப்பரியு நடக்கவே ... ... ... கந்தன், (௰)

பக்கத்துக்கிரு கொம்பும்படைத்திட்டுத் ... ... ... *
திக்குக்கஜங்களும்பணியவே... ... ... ... *
பானிறமிகுத்தவயி ராவதமெனக்குலவு ... ... ... *
பார்புகழ்மதக்களிறு நடக்கவே ... ... கந்தன், (௰௧)

வேறு.

தனனதனதாத்ததன-மூன்று.

மூடிக்ககனப் பரப்பையெல்லாஞ் சுற்றி ... ... ... *
யோடித் திசைதொறுந் தாவியே ... ... ... *
முரணவுணருற்பயம திலையிலை யெலார்க்குமென ... ... *
மொழிதருதல் போற்கொடிக ளாடவே. ... கந்தன், (௰௨)

நீடுஞ்சுருட்டி பொன்னலவட்டங்கொடை ... ... ... *
யாடும்விருதின் வகைமுழுதும்... ... ... ... *
நிமிர்ககனமேற்றடவ வருகுறள்க ளோற்றடர ... ... *
நிலவியிருநாறறிசையு முலவவே... ... ... கந்தன், (௰௩)

வேறு.

தனதனதந்தத்தானம் - மூன்று.

பத்துத்திசையுஞ் செவிடுமேன்மேலுறச் ... ... ... ...*
சத்திக்குமேள வினங்களுடன்... ... ... ... *
பல்முரசம்பொற்ருளம் பதலைகுறிஞ்சிக்கோதும் ... ... ... *
பறைதவில்பம்பைக்காளங் தொனிக்கவே ... கந்தன், (௰௪)

தத்திமிதெய்யென நிர்த்தத்துக்கொத்திட ... ... ... *
மத்தளங்கொட்டச் சிலதேவர் ... ... ... *
தரிகிடதிந்தித்தோமென் றருகிலிருந்தொத்தோடுந் ... ... *
தவசிகளங்கைத்தாளம் போடவே ... ... கந்தன், (௰௫)

வேறு.

தனனதனதானதன - மூன்று.

அம்புருநாரதர் சித்தியவித்தியாதரர் ... ... ... *
கிம்புருடாதியர் கின்னரராகள்... ... ... ... *
தொடர்கருடகாந்தருவ ரிவர்பலர்களாய்ந்தநய ... ... *
சுதிகொடுபணாநதவிசை பாடவே ... ... கநதன், (கரு)

வம்புறுபூண்முலை மேனகையூர்வசி ... .. ... .. *
ரம்பை திலோத்தமை யென்றுரைக்கு ... ... ... *
மகளிரடைவேய்நதவபி நயபரதமோாநதசதி ... ... .. *
வரிசையுறவோங்குநட மாடவே ... ... கநதன், (கஎ)

வேறு.

தந்ததன - ஆறு.

சொல்லரும்பாரதந் தனனைத்தகபபணா ... ... ... *
வில்லென்னும்மேருவிலெயெழுதுந ... ... ... ...*
தும்பிமுக வைந்துகர எந்தைமகிழ பொங்கிவளா ... ... *
தொந்திவயி றுநதளர நடககவே ... ... கநதன, (கஅ)

வெல்லருநதக்கன் மகத்தை யழித்திட்ட ... ... ... *
வல்லமைவீரனு முனனடகக ... ... ... .. *
விஞ்சமுக னென்றெனுமகநதையையொழிநதுமதன் ... ... *
வெநதுயரி னஞ்சலிசெய் தொதுங்கவே ... ... சந்தன, (ககூ)

வேறு.

தானதனதநததன-மூன்று.

வீரத்திறநகட் கிணையொழிநதநவ ... ... ... *
வீரரொடுலட் சம் வீரரெனும் ... ... ... ...*
வேலெறிசரங்கலொடு நீள்படைகளங்கைகொடு... ... ... *
வீதிவருதம்பியாகள் சூழவே ... ... கநதன், (உ0)

கோரப்படையெனும் பூதப்படைகள்வித் ... ... ... *
தாரம்பரவிக் களித்துமுனனுள் .. ... ... ...*
கூடியநெடும்பசிய தாறவிரைந்தமுரு ... ... ... *
சோனிவனெனுமபரிவி னுடவே ... ... கநதன், (உக)

வேறு.

தானுதனுத்ததன—மூன்று.

பண்டொருநாட்டளை யுண்டதிசைமுகன் ... ... ... *
அண்டையிற்காளாஞ்சி யேத்தியே ... ... ... *
பாரேழுமாக்கியதை நேரோடுகாக்குமுமை ... ... ... *
பாலாவெனுப்பரிவி னுடவே ... ... கந்தன், (உஉ)

விண்டுவெனுஞ்சொக்த மாமனார்கைகட்டிக் ... ... ... *
கொண்டுநற்கட்டியங் கூறியே ... ... ... *
வேலோய்பராக்குமறு நூலோய்பராக்குமறை ... ... ... *
மேலோய்பராக்கெனமு ழேடைவே ... ... கநதன், (௨௩)

வேறு

தனதனத்தத்ததன-மூன்று.

எயபொருளுந்தங்கு முற்பொருளுக்குளா ... ... ... *
செப்பிடபெறறுணாந கின்பமுறமம ... ... ... *
இளமதிச்சர்ப்பமறு கஙிசடைக்கற்றையுடை ... ... ... *
யிறைமகிழ்ச்சிசகடலி லாழவே ...... ... காதன், (௨௪)

சற்பகச்சோலைசூழ் பொற்பதியாண்டிடு... ... ... ... *
மறபொலிவச்சிரபாணியுங் ... ... ... ... *
கணவகுப்புச்சுரர்கள் விலகிநிற்சத்தவிரு .. ... ... ... *
கரமமாத்திச்சிரசு தாழவே ... ... ... கந்தன், (௨௫)

வேறு.

தானதனகூதாத்த-மூன்று.

ஆதிபரையெனு நற்ருயுஞ சடை ... ... ... ... *
மீதுறைகங்கைப்பெருநதாயும் ... ... ... ... *
ஆரமுதம்வாயூட்டி யாசையுடனேபோறறும் ... ... *
ஆரலனைமார்பார்த்து வாழத்தவே ... ... கநதன், (௨௬)

போதுறைமாமி மிகபுகழக்கலை ... ... ... .. *
மாதெனுந்தங்கை மனமகிழப்... ... ... ... *
பூவையரெலாம்வாழ்த்து மாதுசசிசோற்று ... ... ... *
பூமணிபொருலாத்தி யேந்தவே ... .. கநதன், (௨௭)

வேறு.

தனனதன-அறு.

ஊணற்றெழும்புரு வாயவிருடியர் ... .. ... ... *
யாணிக்குண்மந்திராட் சதைகொண்டே ... ... *
உயிாகடொறு நிறைபாம சுகமுருக செயவெமது ... ... *
ளொளிரிறைவ செயவெனமு னிறைக்கவே ... காதன் (௨௮)

ஆணிப்பொன்மாரி குபேரன்பொழிந்திட ... ... ... *
மாணிக்கமாரி யுரகர்பெய்ய ... ... ... .. *
அமரர்மலர் மழைபொழிய மறையவர்க ளிருபுறமும் ... ... *
அணுகியுயர் சுருதிமழை பொழியவே ... கநதன், (௨௯)

ஏர்சொளயன்குரு விந்திரன்றென்முனி ... ... ... *
கீரனருண கிரியர்முதல்... ... ... ... ... *

இயலறிஞ்சர் பலகலைக டெரிபுலவா தலைவனெ ... ... *
இசைமதுர மொழுகுதமி ழோதவே ... கந்தன், (௩௦)

ஓர்தருஞ்சித்தர் குளிகையிறைவைத்துப் ... ... ... *
போகொளெல்லாம்வல்லசித்தனருள் ... ... ... *
ஒருகுமர பரிசதரி சனகவன குளிகைகளில் ... ... ... *
உயர்வதிது வெனவுரைசெய் தேத்தவே ... ...கந்தன், (௩௧)

பவனிசாதக்கண்ணி - முற்றியது.—ஆ ௩௧.

கொச்சகம்.

போதிலுறை வேதனமுதற் புங்கவரெல் லாஞ்சூழ... ... *
ஆதிபரை யீன்றமுரு கையன பவனிவரக் ... ... *
கோதில்புவி மாதரொடு கூடியர மாதர்களும் ... ... *
வீதிதனின் மயங்கும் விதந்தனைச் சொலவோமே ... *

மகளிர் மோகச்சாதக்கண்ணி.

தானந்தன -ஆறு.

கட்டியணைத்தெனைச் சேரீரோ ... ... ... சாமி, *
மெட்டிபொருமுக்கந் தாரீரோ ... ... ... *
காலந்தி யேதிங்குகு யொன்றமு தோபொங்குது , ... ... *
காமஞ்சகி யேனென்றனள் ... ஓர்மாது ... (௧)

இஷ்டங்கொண்டென்றனைப் பாராயோ ... ... ... சாமி, *
கட்டுங்கடப்பந்தார் தாராயோ ... ... ... ... *
கரும்படி சோமன்றழல் வாள்சிந்துதல் பாரிங்கினி ... ... *
யேதென்செய லோதென்றனள் ... ஓர்மாது ... (௨)

வேறு.

தனதானதன-ஆறு.

வேளொன்றுமக் குபெயரிருக்கமத ... ... ... *
வேளெனப்பேர்வைத்துக்கொண்டொருவன் ... ... ... *
விசைகொண்டடர் மலர்வெங்கணை சொரிகின்றன னவணிங்கெனை ... *
விலகும்படி செயுமென்றனள் ... ...ஓர்மாது ...(௩)

தாளாதகாதல்கொண் டேன்தேவரீர்மேலிங் ... ... *
காளாவிடினும்பொன் மாலைதந்தாற் ... ... ... *
றளர்பெண்பழி யதுவந்துமை யணுகுஞ்செய லிலையிங்கிது ... ... *
சாதகந்தயை செயுமென்றனள் ... ஓர்மாது ... (௪)

வேறு.

தானந்தன-ஆறு.

சொர்க்கம்பெறுந்தெய்வப் பெண்பிடிபோல்நானுஞ் ... ... *
சொர்க்கம்பெறுந்தெய்வப் பெண்பிடிகாண் ... ... *

ருதன்றெழி லாருங்கும ராமங்கள நீபந்திகழ் ... ... *
தோள்தநதெனை யாளென்றனள் ... ஓமாது ... (௫)

பக்கத்தூறுங்குறப் பெண்போலெனை வைத்தால ... ... ... *
விக்கிக்கொளத்தினை மாவைக்கொடேன் ... ... ... *
பாரும்பசி யாறும்படி வாரகஙகிள நீருந்தெளி ... ... ... *
பாலுந்தரு வேனென்றனள் ... ... ஓமாது ... (௬)

வேறு.

தனதானதனதானதன-ஆறு.

அக்கம்பக்கமெனை யெசசொல்லுஞ்சொல்லட்டும ... *
வெட்கமெல்லாம்விட்டு விட்டேனுனை ... ... ... *
ஆதிமாமய லேகொண்டனன் அனையாவிடி லொபெண்பழி ... *
யடையாதுவி டாதெனறனள ... ... ஓமாது ... (௭)

மைக்குறத்திக்கண் வலைக்குளாகபபட்ட ... ... ... *
மெய்குறவாநின்னை யெப்படியும் ... ... ... *
வளர்மாமுலை யாலிங்கன விதமோடிணி ராணின்புற ... ... *
மருவாது விடேனெனறனள். ... ... ஓமாது ... (௮)

வேறு.

தனதத்தனதானதாத-மூன்று.

அஙகைவேலேந்திய செட்டியாரோ யுாதநு ... ... *
செஙகைநிறைபதந தனாதருவேன் ... .. ... *
அதனுக்கிணையாகவெனறன இதழூர் கமுதூறுமிரட ... ... *
அதரக்கனிதாருமென்பள் ... ... ஓமாது (௯)

சஙகநூதித்திடும் பாவலரோ பணித் ... ... *
தங்ககருடமபணந் தாநிடுவேன ... .. ... *
தனிமைபபடவாருமென [illegible] ளமெய [illegible] மொரவினெறு .. ... *
சரசக்கவி பாடுமெனபள ... .. ஓமாது .. (௧௦)

வேறு.

தானதத்தாதாதன-மூனறு.

ஆகங்குளிர வெணைச்சேரும .. ... ... இலலை. *
யாகிலெனகை வளையைச்தாரும ... ... ... *
ஆர்தடுப்பாரியகெனை நீதடுசதேசென்றிடில. . ... ... *
ஆணைவைபபேனென்றனள் ... ஓமாது ... (௧௧)

நாகரீகமபெறுஞ் செவ்வேளே யுனறனை ... ... ... *
வாகுவிறசூடிய மாலைதாதால . .. ... ... *
நாண்மலர்ப்பூவைங்களை வேள்ணைபபாரொங்சறைம ... ... *
நாடவொட்டே னென்றனள ... ... ஓமாது ... (௧௨)

மகளிர் மோகசசந்தக்கண்ணி முற்றிடத்—ஆசை.

கொச்சகம்.

இந்தவித மோகவெறியேறிமட மாதாகுழாக ... . *
சிந்தை மயங்கித் திகைத்துருகி நிறகவியபால... .. *
அந்த முறைமலே வரைணிமறு கெலாமபவனி .. ... *
வந்துமுன்போற றென்பழனி மாமலையினை மேவினரே. ... *

வாழிச் சந்தக்கண்ணி

தானதன - ஆறு.

வாழியெமக்கருள் செயமுருகனபதம .. ... *
வாழிதெயவானை குறமாதும் . ... .. *
வாழிபருள் வாழிதகா வாழிகொடி வாழிமயில .. . *
வாழியயில வாழிபுயம ... .. .. வாழியே, (௧)

வாழிதிருமகள வாழ்பழனிபபதி . . ... ... *
வாழிமெயதொண — ரினநகளெலலாம ... .. .. *
வாழிமறை வாழிபுகழ வாழிதமிழ வாழிமுனிவ .. .. *
வாழிபுவி வாழிமிக .. ... ... வாழியே, (௨)

வாழிசந்தக்கண்ணி-முற்றியது.— ஆ ௨.

பினமுடுக்குச்சாதககொமமிக்கணணி-முற்றிய து.-ஆ ௰௨.

கலிதறுறை-௨, வெண்பா-௩, கொச்சகம ௫, ஆ செய்யுள், ௮௦.

---

கொம்மிசந்தம்.

இராகம தன்யாசி - ரூபகதாளம்

பல்லவி.

கொம்மியடியுங்காள-பெணகாள-கொம்மியடியுஙகாள . *

அநுபல்லவி.

நம்மையாணடருள பழனிசசண்முகன் . ... *
நனினபபத மலராபபணி வொடுக்கிதபழ மனதிற்கொடு ...... (கொ)

சரணங்கள.

நம்பழனிககிரணடு குலுஙகச் .. ... *
செம்பொனமணியுங்குழையு மிலங்க ... ... *
பமபரமெனச்சுழன் றுசுழன்று .. .. *
பாமன்கனல விழிவாகுமரனறுதி சொலியனபொடு ... (கொ)

தொண்டைச்செருககின மலர்களசரியத் ... *
சணடைபபதந்தி ணடைவுதெரிய ... ... *
முட்டககரவளைகளொலிகக . ... *
முருகன்புக ழெனும்வணடமி ழிசைகொணடபி நயமினபொடு... (கொ)

நாட்டமரிபிடிசசணலாம ... ... .. *
இட்டசித்திகளெலலாமபெறலாம் ... .. *
பாடகமாதத நடபிறமலயன ... ... ...*
திகழுமரும்பலங்களரு ணமுஞ்சொலி அணிகொணடே—திர (கொ)

கவிகேட்டுப்பொன்மணி யோலைசுமந்தி து காறுநின்ற ... ... *
செவியானதின்றலவோபயன்பெற்றது சேயிழையே. ... ... *

வெண்பா.

பேறு பெறுஞ்சுப் பிரமணிய பண்டிதவேள் ... ... ...*
கூறுசந்தக் கொம்பியே கொம்பிமற்றோர் - கூறுகொம்பி ... *
இம்பியளவு மினிமைதராப் பான்மையினா ... ... *
றம்பியெனலா மென்பா ராய்ந்து. ... ... . ... *

---

ம - ா - ா - ஸ்ரீ குள்ளப்பநாயக்கர்

## தங்கமுத்துப்பிள்ளை.

இவர்கள்மீது பாடியது.

வெண்பா.

சாறறும்பழனிமலைச் சந்தக்கொம்பிப்பாடல்... ... ... *
ஏற்றமுடனேயரங் கேற்றிய - தேற்றமுள ... ... *
நெய்க்காரப்பட்டி நிலவுகுள்ளப்பற்புகழ ... ... ... *
எய்க்காரப் பட்டியிணை யே ... ... ... ... ...*

விருத்தம்

செய்க்காரப்பட்டியுழ வக்குழாம்வளம்படுக்குஞ் செழுமைமேய ... *
நெய்க்காரப்பட்டிவள்ளல் குள்ளப்பனரங்கேற்றி நிறைசீர்பெற்றான் *
பொய்க்காரப்பட்டிகளுக் கருள்செய்யாப்பழனிமலைப் புனிதன்செய்ய *
மெய்க்காரப்பட்டினியல் சந்தக்கொம்பிப்பாடல்விளங்கவென்றே... *

கட்டளைக்கலிப்பா.

சங்கமுத்துநிறைபழனுபுரிச் சந்தக்கொம்பித்தமிழரங்கேற்றினர், துங்க முத்துலை நாட்டியங்கூட்டிலிற் றெருகுமுலைக்குநன் னீர்ப்பாய்ச்சும்வண்மைய ர், பொங்கமுத்துங்க நெய்க்காரப்பட்டிவாழ் பூயன்குள்ளப்ப மாலுங்கங்கா குலத் தங்கமுத்துநல் வேநதர்மகிழவே தாசில்செய்யு மகிபதிதானுமே... *

ம-ா-ா-ஸ்ரீ புதுவை-சுந்தரமுதலியார்மீது பாடியது.

முதுவையாபுரிக்குகன்மேற்சிதம்பரச் சுப்பிரமணியமுதுவன்றில்லைப் *
பொதுவையாதரித்தேத்துமன்பன்மொழிந் திடுங்கொம்பிப்புதியபாடல் *
மதுவையார்குவளையணிமார்பனெங்கள் சொக்கலிங்கமகிபனீன்ற *
புதுவையார்சுந்தரவேள் கரும்பொனமுந்தாவரியாற்பொலிவித்தானால் *

## சாத்துக்கவிகள்.

இ ஃ து,

ஸ்ரீமகாபாரதகீர்த்தனஞ்செய்த

முத்துராமமுதலியார் தமையனார் குமாரர்

# கொ. சபாபதிமுதலியார்

பாடியது.

அசியவிருத்தம்.

துதிபெறுந்தில்லைமுத்தையாருள்கணணியன் ... ... *
தோமறுபுகழ்க்கணணியன் ... ... ... *
தோன்றுமெனதறிவினைவிளக்கவருபுண்ணியன் ... ... *
சுப்பிரமண்ணியனெனும்பேர்ச் ... ... ... *
சதுரனவசித்ரகவிபண்டிதன்பழனிமலை ... ... ... *
தனிலுறையுமவேற்பண்டிதன ... ... ... *
தான்மகிழ்தரச்செய்யுமுசிதசந்தக்கொம்மி ... ... *
தன்னையச்சிற்பதித்திங் ... ... ... ... *
கிதமொடனைவாக்குமீநிடவினியவித்தகை ... ... *
யிசைத்தமிழ்ப்பைநதொடையினை ... ... *
இதுவனாயில்யாம்பெறறிலோமெனனவைங்கரத் ... *
துறையவன்வயிறுப்பிறன் ... ... ... *
சதுமுகன்மிகவாடுமனமுற்றனன்சக்ர ... ... *
தரனுமநாணத்தையே *
தானபெற்றனனபரமசிவனுமேயதிசஞ் ... ... ... *
சலத்தைமேற்கொணடனனரோ ... ... ... *

சாத்துக்கவிகள முற்றுப்பெறறன.

---

கொம்மியடியுங்காள் - பெண்காள், என்னப்பாடத்தக்கது, கொம்மியடியுங்கடி எனறும், இன்னும்பலவாறுகவும், மருவி வழங்குகின்றமையால், அவ்விதமாகப்பாடினும் அமையும். கொம்மையென்னுஞ்சொல்-கொம்மியென்று மருவிநின்றது. அதன்பொருள், கைகுவித்துக் கொட்டல்.—கள்-என்னும் விகுதிச்சொல். காளென விகாரவகையானீண்டது. மக்கள-மக்காள்-நமர்கள்-நமாகாள்-என்பனபோல—ஏடி-எனபது, தோழிமுன்னிலைச்சொல், உதாரணம்- [பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம் பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடி] இதுதிருவாசகம், இநத-ஏடியென்னுஞ்சொலானது அடியெனமருவிவழங்குகினறது. இச்சொல்-அடியுங்கள் என்னுஞ்சொல்லின் ஈறறில்சேர்ந்தால். அடியுங்களடியென்றகும்—அதிலும்-ளகரவொற்றுகெட்டுஅடியுங்கடி - எனவழங்கப்படுகின்றது,—இந்தக்கொம்மிப்பிரபந்தத்தில் பின்னிரண்டடியுஞ்சந்தமாகையால், இதனைப் பின்முடுகுச்சந்தக்கொம்மியெனச்சொல்லப்பட்டது.

திருப்பழனிமலைத்

## தெண்டாயுதக்கடவுள்பேரில்

# தோத்திரமாலை

எழுசீர்க்கழிநெடில விருத்தம்.

மாமேவுகருணையொடு மதமொழுகுமாதங்க வத்திரர்களிக்க புலகைப் ... *
பூமேவுமயிலினமிசை நொடியில்வலம்வருகுழக புலவகுமரவெனவே... *
பாமேவுநினதுமை மோதுமடிபேன்மனப் பருவரலொழித்தருளுவாய் ... *
தேமேவுசோலைசூழ் தென்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே ...(௧)

செங்கண்மாலுந்திலவந் தவனைபுடைத்தருஞ் சிறையிலிட்டலையாழிசூழ் ... *
அங்கண்மாஞாலமுழு தும்படைத்திட்டமுரு கையநிற்போற்றுமடியார் ... *
தங்கண்மெல்லடியிறைஞ் சுந்தொண்டனென்மனச் சஞ்சலமகற்றியருள்வாய்
திங்கண்மும்மாரிபொழி தென்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே.௨

முழுமதிமுகச்சசி யிடற்றுமங்கலநாண் முரண்கொடுநிலைப்பவிண்ணோர் ... *
விழுமமுஞ்சூருமலை யலையுநிலைகுலையவடி வேல்விட்டமயில்வீரனே ... *
தொழுமுனதுதொண்டனேன் பழவினையையம்மனத் துயரையுமறக்களைகுவாய்
செழுமணிகொழித்தருவி வருபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே.(௩)

முத்தநகைமேவுகட வுட்பிடியுமழகெலா மொய்த்தகுறமானுமகிழ்வாய் ... *
நித்தமகலாதுவிளை யாடுமிருமூன்றுமுடி நிலவுமாணிக்கமலையே ... *
சுத்தமுறுநின்னடியர் தொண்டுபுரியேழையேன் றுரிசகலவருள்புரிகுவாய் *
சித்தர்கணமாருது நிறைபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே ... (௪)

கந்தாகுகாவேல மோலமென்றொருதமிழ்க் கவிவலனமைக்கவன்றேன் ...*
சிந்தாகுலங்கெடச் சிலைமுழைதிறந்தருஞ் சிறைவிட்டவடியாவாழவே ... *
கொந்தாருநின்றாளை நம்புமடியேன்மனக் குறையொடிடரறநினைகுவாய் ... *
செந்தாமரைத்தடஞ் சூழ்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே ... (௫)

அந்தமுறுமொருதையன் முருகாவெனக்கூவு மவ்வுரைதனக்கிரங்கி ... *
வந்தவளிடுக்கமதொழித்துளமகிழ்ச்சியுற மனனருளபுரிந்தகோவே ... ...*
சாந்தமுறுநின்பாத வந்தனைசெய்நாயினேன சம்பலைதொலைத்தருளுவாய் ... *
செந்தமிழ்மணங்கமழ் திருபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே.(௬)

நீங்கருமிருட்படிவ முற்றவவின்மாயையொடு நின்றகிரவுஞ்சமலையைத் ... *
தூங்கண்முகனைக்கடிதி லண்டர்கொண்டாடத் துணித்தவடிவேற்குமரனே*
வாங்கரும்வினைக்கடம் பணியுனடிதொழுவேனை மம்மரணுகாமலருள்வாய்*
தீங்கனிமதுக்கழனி சூழ்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே ... (௭)

அங்கையறுகிளந்திங்க ளணிபரனுமம்பிகையு மலைமாதுமைங்கரனும்வான் ... *
முகிலுருவனைந்தநெடி யோனுமுளமகிழுமயின முதுகினடமிடுகுருநதே ... *
மங்கையுறுநின்புகழ் வழுத்துமித்தமியேன் மனக்கவலைநீக்கியருள்வாய் ... *
திங்கணின்றுறுபொழில சூழ்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே.(௮)

புங்கவர்கடம்மைமு னலைத்தெதிரில்வம்புரை புகன்றெதிர்ந்தமர்செயவருஞ்*
சிங்கனதுரம்பிளக் கக்குலிசவேல்விட்ட சேவற்கொடிக்கந்தனே ... *
தங்கமுறுநின்கழல் வணங்குமடியேனமனத் துயரறக்கருணைபுரிவாய் ... *
செங்கமலமாதுவளர் தென்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (௯)

மாமறைதுதிக்குமிம யக்கொடியவாவொடு மலர்க்கரந்தன்னிலேந்துக்... ...*
காமர்நிகர்கணனிணையி ரேடணைத்தின்புறுங கனகதண்டைக்காலனே ... *
பூமருவுநின்சரண முன்னுமடியேன்மனப் புன்கணறவருள்புரிகுவாய் ... *
சேமநிதியெங்கெங்கு மிதுபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (௧௦)

தோத்திரமாலை - முற்றியது.—ஆக ௧௦.

---

## கீர்த்தனம்.

இராகம் - தன்னியாசி - தாளம் - ஆதி.

பல்லவி.

வேலுமயிலுந் துணை வேலுமயிலுந் துணை ... ... .. *
வேலுமயிலுந் துணை. ... ... ... கதிர்வடி *

அநுபல்லவி.

சாலநுதிக்கும்பழ னுபுரிவாழ்மலைத் ... ... *
தாளன்-வள்ளிமணாளன்.—கதிர்வடி ... ... வேலும

சரணங்கள்.

பாலுங்கனிரசமும் போலுமொழிக்குஞ்சரி ... ... ... *
பாகன்-பணிருவாகன்.—கதிர்வடி ... ... வேலும (௧)
ஆலம்பருகுமக தேவருதவுகும ... ... ... *
ரையன்-எனையருள்மெய்யன்.—கதிர்வடி ... வேலும (௨)

பாடுஞ்சுருதிசொல் விமாசலமாதருள் ... ... .. *
பாலன-தானவகாலன்.—கதிர்வடி ... வேலும (௩)
வாசங்கமழும்வன மாவியுளாங்குமம... ... ... ... *
மருகன-சரவணமுருகன.—கதிர்வடி ... வேலும (௪)

ஓதும்பிரணவமதி லாருமெய்ஞ்ஞானசொ ... ... *
ரூபன்-பரிமளநீபன.—கதிர்வடி ... ... வேலும (ரு)
பூமியதனிலுயர் தேவர்சிறைவிடுத்த ... ... ... *
புண்ணியன்-சுப்பிரமண்ணியன்.—கதிர்வடி ... வேலும (சு)

இராகம் - தன்னியாசி - ரூபகதாளம்.

பல்லவி.

ஆடுதுபார் - ஒருமயில் - ஆடுதுபார் ... ... *

அநுபல்லவி.

வாடுமபயிர்க்குமழைபோலமரர்முன் ... ... *
வந்தின்பம்நல்கும்பழனிக்குமரனை ... ... ... *
நீடும்பிடரியிற்றாங்கிக்கொண்டேயிவர் ... ... *
நித்தியர் நித்தியர் நித்தியர் சத்தியர் சத்தியரொன்றிங்... ... (காடுது)

சரணங்கள்.

அண்டரண்டபகிரண்டத்தடுகருகள் யாவுமேநிலை கலங்க ... விரி
யகிலமுஞ்சக்கிரவாளமும்மேருவும்அஷ்டகிரிகளுங் குலுங்க... ... *
பண்டைவினைகளுங்கோரும்பட ரினும் ... ... *
பன்னருந்துன்பங்களெல்லாநதடரினுஞ் ... ... *
சண்டனெதிர்ப்பினுந் தொண்டர்க்குச் சண்முகர் ... ... *
சரணஞ்சரணஞ்சரணஞ்சரணஞ்சரணஞ்சரணென் ... ... (ருடுது)

பவ்வமெனுந்திருப் பாற்கடற்பாநதள் பதைபதைத்துள்ளநடுங்க ... இந்தப்
பாருலகைச்சுமக்குமோர்சேடன்பலமெல்லாங்குன்றியொடுங்க... ... *
இவ்வளவென்றிலக் கிட்டொருவர்விள்ள ... ... ...*
ஏலாவகிலாண்ட கோடிகளி லுள்ள... ... ...*
எவ்வுயிர்க்கும்இறை வேலவர்தாமிச்சொல் ... ... *
இரண்டன்றென்றிரண்டன்றென்றிரண்டன்றென்றிரண்டன்றென் (ருடுது)

வெண்மைப்பொடியணிநாதர்தம்பணிகள்மின்சடைக்காட்டுக் துளொளிக்க,மிக
வீறியஅஷ்டமாநாகங்களுந்தீயில் விழும்புழுவைப்போல் நெளிக்கத்...*
திண்மையதாம்பெரும் பிறவிப்பந் தத்தைத் ... *
தீர்க்குஞ்சுப்பிரமண்ணியர் பாதாரவிந்தத்தை ... ... *
உண்மையுடன்மனத்துன்னுவர்க்கின்பவீ ... ... *
டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டென் ... (ருடுது)

## காவடிச்சந்தவிருத்தம்.

தத்ததத்தன-தானதத்தன-தானத்தானன-இவ்வண்ணம் மூன்று.

ஈற்றில்-தனதான.

அப்பமிட்டெலி தோசைநெற்பொரி பாகிற்சேரவல்... ... ...*
முப்பழச்சுவை யாதிவர்க்கமெ லாமிக்காய்நுகர் ... ... *
அத்தர்சித்தி விநாயகர்க்கிளை யோனெட்டாமறை . ... ...துதிமூலன்.

அச்சமுற்றொரு கீரனற்றமி ழோதக்கூரயில் ... ... ... *
விட்டடற்கிரி தூளெழப்பணி மாழ்குற்றூர்சிறை ... ... *
யைத்தவிர்த்த விசாகனற்புத நீபத்தாரணி ... ... மணிமார்பன்
செப்பிணக்கிய பூண்முலைக்குற மானுக்காயட ... ... *
விப்புனத்ததி கூனெழக்கிழ ருபத்தோடடர் ... ... ... *
சித்திரப்பசு மாமயிற்சுவல் மீதுற்றுடிய ... ... வதிருபன்.
சிற்சபைச்சிவ காமிதற்பனை மோனச்சாமளை ... ... ... *
முத்தொழிற்கதி காரிபொற்றிரி கோணச்சார்புறு ... ... *
சிற்பராத்பரி மாசுலக்குயி லாதித்தாயருள் ... ... ... சிறுபாலன்.
இப்பிறப்பெனு மாழ்திரைக்கடல் மூழ்கிக்காதலெ ... ... *
ன்சொலச்சுழ லாலலைப்புறு மூடப்பாவியை ... ... ... *
யெய்ப்பறக்கமழ் சேவடிக்கணை சேரப்பேரருள் ... புரிவேலன்.
எற்றிருட்கட லோவிடக்கிரி வீழக்காரவு... ... ... ... *
ணக்குலத்தர சாய்முளைத்தவ சோரச்சூர்கெட ... ... *
இச்சைவைத்திமை யோர்விணிற்குடி யேறத்தானயி ... வெற்றிவீரன்.
அப்பெருக்கர வார்கடுக்கைநி லாஈற்கூவிளம் ... ... *
வைத்தமைத்திடு வார்சடைச்சிவ லோகர்க்கோர்மொழி ... *
யத்தமுற்றுமி தேயெனக்கனி வாய்விட்டோதிய... ... குருநாதன்
அஷ்டசித்திக ளாடுமெத்தர்ப ராவிச்சூழ்பழ... ... ... ... *
னிப்பதிக்கிறை யேழைகட்கொரு தாயைப்போலருள் ... ... *
அற்புதக்கும ரேசனுக்கபி ஷேகக்காவடி ... ...இதுவாமே. (௪)

காவடிச்சந்தவிருத்தம்-முற்றியது.

காவடிக்கீர்த்தனம்-இராகம்-தோடி-சாபுதாளம்.

பல்லவி.

அற்புதக்கும ரேசனுக்கபி ஷேகக்காவடி ... இதன்
அருமையாவ ரறிவரறியும் அய்யன்சேவடி ... ... ...*

அநுபல்லவி.

தற்பரப்பொருளாகிப்பழனித் தலத்துள்நிலைத்த சண்முகாவெனச் ... *
சந்ததம்புக ழன்பரிதயத் ... ... ... ... *
தண்டாமரைமீதுமன்னுந்-தெண்டாயுதபாணியென்னும்—அற்புதக்.

சரணங்கள்.

விதிக்குமரிக்குஞ் சுரர்க்குமிடுக்கண் விலக்கியலோலன் ... ... கறை
மிடற்றுப்பரர்க்குத் தனித்தப்பொருளை விரித்திடுமூலன் ... ... *
மதிப்பறச்சமர்க் கெதிர்த்தஅசுரை வாட்டியவேலன் ... ... பனி
மலைப்பசுங்கொடி களிக்கநடித்து வருஞ்சிறுபாலன் ... ...

உ

வேலுமயிலுந்துணை.

திருப்பழனிமலைத்
தெண்டாயுதக்கடவுள்பேரில்
பின்முடுகுச்

# சந்தக்கொம்மிப்பாடல்.

சிதம்பரம்,
தளவரிசை - முத்தையஞானியார் புத்திரராகிய
ஆயுள்வேதபாஸ்கர

## சுப்பிரமணியபண்டிதர்

இயற்றியது.

இஃது,
பழனித்தேவஸ்தான விசாரணைக்கர்த்தராகிய
நெய்க்காரப்பட்டி
ளா-ளா-ஸ்ரீ, கு-குள்ளப்பநாயக்க ரவர்களாலும்
ளா-ளா-ஸ்ரீ, தங்கமுத்துப்பிள்ளையவர்களாலும்
தெண்டாயுதபாணி சந்நிதானத்தில்
பரிதாவி௵ பங்குனி௴ உத்தரநக்ஷத்திரத்தில்
விபவத்துடன் அரங்கேற்ற

புதுவை - சொக்கலிங்கமுதலியார்குமாரர்
ம-ளா-ளா-ஸ்ரீ, சுந்தரமுதலியாரால்
சென்னபட்டணம்:
கலாநிதி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

—:o:—

பிரஜோற்பத்தி௵ ஐப்பசி௴-௫-ம் பதிப்பு.

# சாத்துக்கவிகள்.

இஃது,
வேதாந்த சித்தாந்த சைவசமயாசாரியபீடமாய்
விளங்காநின்ற
திருவாவடுதுறை ஆதினம் வித்துவசிரோமணி
**தாண்டவராயசுவாமிகள்**
இயற்றியது.

கலித்துறை.

முக்கட்குருக்கள் குருவாம்பழனி முருகனுக்குத்
தக்கதமிழினிற் சந்தக்கொம்மித்திருத் தண்ணலங்கல்
இக்குவியப்பப் புனைந்தானெழிற்றில்லை யிற்புகழால்
மிக்குவளர்சுப் பிரமணியப்பெயர் மேலவனே.

ஆறுவதனமு மீராறுதோளு மணிபெறவே
ஏறுமயிலு மிசைந்தாடக்கொம்மி யினிதிசைத்தான்
கூறுபுகழ்ப்பழ னிக்குமரேசர்க்குக் கோதிறில்லை
வீறிவளர்சுப் பிரமணியப்பெயர் மேன்மையனே.

இஃது,
காஞ்சீபுரம்-பஞ்சையப்பமுதலியார்
கல்விச்சாலையில்
தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய உபாயாசிரியர்
காஞ்சீபுரம்,
**சபாபதிமுதலியாரவர்கள்**
இயற்றியது.

வெண்பா

கண்டனந்தன் வாழ்த்துங்கா தற்சுப் பிரமணியப்
பண்டிதன்கூறும் பழனிமலை • அண்டொலாஞ்
சந்திக்கு மத்தர்மகிழ் சந்தக்கொம் மித்தமிழைச்
சிந்திக்கு முத்தமர்கள் சீர்.

கலித்துறை.

புவியோர்புகழ்பண் டிதன்சுப்ரமண்யப் புலவனன்பர்
தவியாதருள்பழ னிக்கெனப்பாடுஞ் சந்தக்கொம்மியாங்

கதிர்வேல்தருபண்டைச்சீலன்-கவிதகனகதண்டைக்காலன் ... ... *
துதிசெய்யடியருக் கனுகூலன் ... ... ... ... ...*
துறவாலுயர்முனிவோர்புகழ்-குறமாதுடனினிதாய்மகிழ். அற்புதக் (௧)

நிலங்கொளுயிருக்குயிராயெங்கு நிறைந்திடுமேகன்... ... ஒரு
நிமைப்பொழுதுமென் னெஞ்சைவிட்டகலா நித்தியவைபோகன் ...*
கலங்கியவொரு நாவலன்றனைக் காத்தருள்தியாகன் ... இந்தக்
கலிக்குப்புதுமையாக விளங்குங்கா ருண்ணிய தேகன் ... *
நலம்பெறுந்தெய்வயானைப்பாகன் நறுங்கடம்பணிபன்னிருவாகன் ... *
துலங்குமங்களாகரவிசாகன் ... ... ... *
தொடர்நம்பவமறவேவரும்-நடனம்புரிமயில்மேல்வரும் அற்புதக் (௨)

பைந்தமிழ்ச்சுவை தனைத்தென்முனிக்குப் பகர்கனிவாயன் ... இந்தப்
பாவிமனதைத் திருத்தித் தடுக்கப் பணித்தவுபாயன் ... ... *
மந்திரப்பொருளாகிய சுப்பிர மண்ணியனெனுந்தூயன் ... மோட்ச
வழிக்கும்புவிக்குள் நடக்குந்தனித்த வழிக்குஞ்சகாயன் ... *
இந்திரன்றுயர்தீர்த்தநேயன்-எங்குநின்றெளிர்கார்த்திகேயன் ... *
கந்தமுலவுங்கங்கைதன்சேயன் ... ... ... *
கதிசேர்வழி தனையேயறை - சதுர்மாமறை முடிமேலுறை அற்புதக் (௩)

கீர்த்தனம்-முற்றியது.

---

## நேரிசைவெண்பா.

திருவெய்துங் கல்வியெய்துஞ் சென்மநோய் தீர்க்குங் ... *
குருவெய்து மோட்சமுங்கை கூடும் - உருவாம் ... ... *
புலிமாலை விட்டோர் புகழ்பழனிச்செய்மேற் ... ... *
கவிமாலை சூட்டினர்க்குக் காண் ... ... ...(௧)

கனிரசமே தேனேநற் கற்கண்டே பாகே ... ... *
தனிமறையின் சாரமே தாயே - யெனவுருகி ... ... *
யுன்னுமவ ருள்ளத் துறைபழனி மாமணியே ... ... *
யென்னுளக்லா திரு ... ... ... ... (௨)

அன்னை யுமையளித்த வாரமிர்தைத் தேவகுல ... ... *
மன்னைப் பழனிமலை வாழ்வரசை - என்னைமிகப் ... ... *
போர்த்திருந்த வஞ்ஞானம் போக்கிய வென்னையனையே ... *
பார்த்திருந்தாலும் போம் பசி ... ... ... (௩)

ஆர்பகைத்துங் கோள்பகைத்து மூராளி ராசாங்கத் ... *
தார்பகைத்து முற்றார்க டாம்பகைத்து - மியார்பகைத்து ... *
மென்செயலா நம்மைநெஞ்சே ஈதில் பழனியான் ... *
மின்செயுக்தா ளும்பணிவ மேல் ... ... ... (௪)

வேதன் முதலாய விண்ணவர்கள் சூடுமலர்ப்
பாதன் பழனிப் பதியுறுறை - நாதன்
சரண நினையார் தனைக்குறுக லில்லா
மரணபவ நோய்க்கிளையா வாக். (ரு)

ஆராதித் துன்ற னடிவணங்காப் புல்லனாயான்
சேரா திருக்கவருள் செய்குவாய் - சீரார்
இருக்குநா லிசைக்கு மெழிற்பழனி வெற்பில்
இருக்குங் குகாநின்னை யே. (சு)

கையி லயிலிருக்குங் கண்களி ராறிருக்கும்
மெய்யி லணிமுரலும் வெட்சிதொங்கும் - பொய்யிலர்க்கு
மெய்யன்பழனிமலை வேலனெனை யாண்ட
ஐயன் றனக்கடை யாளம். (எ)

கோவையென் றுருயிரைக் கோலமறைதுதிக்குந்
தேவை யுயர்பழனிச் செல்வநதை - யேவை
விழியாக்கொள் வள்ளிமகிழ் வேலரசைக் கண்டோ
ரழியாப் பதம்பெறுவ ரால். (அ)

பொறிகலங்கி நாவும் புலர்ந்தெயிறுங் கிட்டி
யறிவழிந்தை நெஞ்சளவு மாகிச் - செறிமூச்சுற
றீவரமா காமுன்னந் தென்பழனி வெற்பிலுறை
மாவரனை நெஞ்சே வழுத்து. (கூ)

ஆரணனு மாலு மறியவொண் ணாதபரி...
பூரணனுக் குண்மைப பொருள்விரித்த - வாரணத்தின்
மாதுவசத் தத்த மலைப்பழனித் தேவகுற...
மாதுவசத் தத்த வருள்வை. (௰)

வானுந் தொழும்பழனி வள்ளலடிக்கீ ழிமைப்போ...
தேனுந் தனித்தசைவற் றேயிருக்கி - லானந்த
வாரியாடித் திளைப்பை வாழிநெஞ்சே நாதாந்தப்
பாரிலாடிச்சுகிப்பை பார். (கக)

எங்குந் ததும்பி யிருக்குநின் பேரருட்கு
லிங்கித நாய்க்கிடஞ்சற் றின்றுகொலோ-பொங்கும்
பழனிமலை யின்றெடுத்த பாலாபுகழ்சேர்
பழனிமலை வாழ்குரு பரா. (கஉ)

குடும்பமெனுஞ் சேற்றுக் குழியில் முழுத்தி
யிடும்பையெனும் பாரமியற்றி - யிடுங்கொடிய

தற்போத மென்றகலுஞ் சாந்தருறை தென்பழனி ... *
வெற்பாரு மன்பர் வாழ்வே. ... ... ... ... (௧௩)

ஒழியும் பவமயன்கை யோயுமுயர் வீட்டின்... ... ... *
வழியுந் திறக்குமிது வாய்மை - பழியகன்றோர்க்... ... *
கெண்ணியவெல் லாமளிக்கு மெங்கள்பழ னிக்குகனைக் ... *
கண்ணிமைப்போ துண்ணினைந்தக் கால். ... ... (௧௪)

ஆதியை மெய்ப்போத மடைந்தோர்க்கு வாய்த்தவரு ... *
பூதியை வையா புரியிலுறை - சோதியைக் ... ... ... *
கண்டேன்வின் டேனிடரைக் காண்பரிய ஞானவமு ... *
துண்டேனன் டேன்கருப்ப வூர். ... ... (௧௫)

ஏழைக் கிரங்குதெய்வ மென்றுன்பால் வந்தடைந்தே ... *
னேழைக் கிரங்க விதுதருணம் - ஊழைவென்ற ... ... *
சீலமுனி வோர்போற்றுந் தென்பழனி வெற்பிலுறை ... *
நீல மயின்முருகா நீ. ... ... ... (௧௬)

நேரிசைவெண்பா - முற்றியது.—ஆ - ௰௬.

௨

வேலுமயிலுந்துணை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

திங்களறுகித ழிச்சடையாளர் திருமகனை ... ... *
யெங்களரசைப் பழனிப்பெம்மானை யிரும்புலவோர் ... ... *
தங்களருங்குல தெய்வத்தைச்சாற்றுந் தமிழ்விளங்க... ... *
மங்களவேழ முகவன்பொறபாதத்தை வாழ்த்துதுமே.... ... *

மாலை.

திருவாரிணைமலர்த் தாளையெப்போதுமென் சிந்தைவைத்து ... ... *
மருவாருளன்பெனு மாமலரிட்டு வணங்குமந்தப்... ... ... *
பெருவாழ்வுந் தொண்ட ருறவுநினைப்புகழ் பேற்றையுமே ... ... *
தருவாய்பழனி மலைமீதுறையுந் தண்டாயுதனே... ... ... (௧)

முருகாகுகாகும ராகுழகாநன் முராரிதிரு... ... ... ... *
மருகாவெனநின் றிருநாமந்தன்னை மனத்திலுன்னி ... ... *
யுருகாதுருகிப் பரவவரமின் றுவந்தருளாய் ... ... ... *
முருகார்பொழிற் பழனுபுரிவாழு முழுமுதலே ... ... (௨)

ஆட்டானைப்பாசத்தி லாட்டானையன்பரை யாறுபடை ... ... *
வீட்டானைநன்முத்தி வீட்டானையின்பம் விளைபழனி ... ... *

நாட்டானைச் சூரனை நாட்டானை நமனை நமனிடத்திற் ... ... *
கூட்டானை நம்மனைய கூட்டானை நவகோடி கூடவிடுமே... ... (ங)

சூரனைவாட்டிமஞ் சூரனைககாத்த தானையைவெட்டித் ... ... *
தாரனையாக்கு புதாரனை மோகந் தழைத்தவலங் ... ... *
காரனை நீடி காரனைவாசங் கமழ்பழனி ... ... ... *
பூரனைசீல மயூரனைப்போற்றுவா யோகிகளே... ... ... (ச)

புண்ணியனைவள்ளி நெய்வானைச்சினிமலை பூங்கடப்பங் ... .. *
கண்ணியன்றேவா சிறைமீட்கவுங்கணைங் கடியமா ... ... *
திண்ணியன்தென்பழனிக்குகன்செந்தாளை சந்திப்பவர்க் ... ... *
கெண்ணியவெண்ண முடனுடனேயிறைவேறிடுமே ... ... (ரு)

நச்சைப்பொருமசுரா ராகுகக்களக்காத நாயகனைக் ... ... ... *
கொச்சைக்குறப்பெண் பாகசேகரனைக் குருபரனைப் ... ... *
பசசைத்தனிமயில் வாகனனைப்பழனிப்பரனைச் ... ... ... *
செச்சைப்புயனைப் பணியாமறவிசென் செய்குவரோ ... ... (சா)

அருமைக்கருணை நிதியைப்பசுங்கிளையவென் நெருங்கிரைப் ... ... *
பெருமைக்குரிய மலைமகள்செல்வத்தைப் பேரைமன்பர். . ... *
இருமைக்குற்றுணையைப்பழனியிலிருந்தத்தை ... ... *
யொருமைப்படத்துதியாதகளவெருமனைவொழிந்தவரோ ... (எ)

அறவாழியையென்றவுள்ளதாறாமையாருயகனிவாய ... ... *
இறவாதரிராகமாதுசிறருசெய்பழிய சேவையருக் ... ... ... *
துறவாதுயார்தவமோதகும்பழனித் துரையையென்று ... ... *
மறவாதவர்கட்கு முன்னாடோறுமுறைந்திருந்த வாசனையே ... (அ)

எடுத்தவன்சத்திப் படையாலமரர்திக்கனைகொணாத் ... ... *
தடுத்தவன்குறையிற பஞ்செனைச்சூரர் தமைப்பறக்க ... ... *
விடுத்தவனன்பர் வினைத்தொகையாவும் விரைந்துவந்தே... ... *
கொடுத்தவனைகாண்பழனிப்பெருமானென் குலதெய்வமே ... ... (கூ)

முன்னவன்யாவர்க்கு மூச்சவியோதா மொழிக்குறமான் ... *
தன்னவன்செந்தாமரைத்தடங்குழுந தமிழ்ப்பழனி ... ... *
மன்னவனமோனப் பொருளைப்பராசரன் மைந்தர்கட்குச் ... *
சொன்னவன்காணவனென்றுயரதத்தைத் தொலைப்பவனே ... (க0)

வாமானையங்கியைச் செங்கையிலேற்றவர் வாழ்வைநங்கள் ... *
கோமானையும்பரிடர்தவிர்த்தானைக் குறவரிடத் ... ... ... *
தாமானைவேட்ட குருநாதனையெழி லார்பழனிச் ... ... *
சீமானைப்போற்றிப் பணிவார்மெய்ஞ்ஞானச் செழுஞ்செல்வரே (கக)

வானந்தனையளித் தானைப்பொதிய மலைமுனிக்கு ... ... *
மோனந்தனையுரைத் தானைச்சிவகிரி முன்னவனைப் ... ... ...*
பானந்தனைய் மிடற்றெயினக்கொடிப் பாகனைச்ச ... ... *
தானந்தனைத்தொழும் புண்ணியரோமுத்தி சார்பவரே ... (கஉ)

மெய்யனடியவர் துன்பங்களையவை வேலெடுத்த ... ... *
கையன்விசாகன் குகன்மயில்வாகனன் கங்கைமைந்தன் ... ... *
செய்யன்குறிஞ்சிக் கிழவன்குமரன் சிவகிரிமுத் ... ... *
தையன்சடக்கர மன்றேகவசமென் னுருயிர்க்கே ... (கங)

தொந்திக்கயமுகத் தண்ணற்கிளவலைத் தூமறைசொ... ... *
லந்திப்பிறைமுடி நாதன்மதலையை யன்பர்கடம் ... ... ... *
புந்திக்குறவனைத் தென்பழநிப்புரிப் புண்ணியனைச் ... *
சிந்திப்பவர்களுக் கெல்லாப்பொருள்களுஞ் சித்திக்குமே ... (கச)

கட்டிடுங்கூறைக்கு முண்டிடுஞ்சோற்றுக்குங் காசினியில் ... *
முட்டியொருவர்த முன்றினிற்செலம்வின் முகிலினைய ... *
தட்டித்திணைகொய் வில்வேடருறையுந் தணிப்பழனிச்... ... *
செட்டிநமக்கிங் களிப்பான்குறைவற்ற செல்வத்தையே ... ...(கரு)

வாதவலிகுன்மங் குட்டமகோதர மண்டைவலி ... ... ...*
சூதகவாயுபக் கச்சூலைபீநசஞ் சோபைமதஞ் ... ... ... *
சீதசுரமுதற் பன்னோய்தெறும்பழ னிச்சிலம்பின் ... ... ...*
மீதமர்வேலன் சடக்கரந்தன்னை விளம்பிடினே ... ... (கசு)

பன்றியையும்மத யானையைச்சிங்கத்தைப் பாய்புலியைக் ... ...*
கொன்றவன்செய் பழனிக்குகனம்முட் குடிபுகுந்தான் ... ... *
பன்றிகரடி புலியானையேமுதற் பன்மிருகந் ... ... ... *
தொன்றிநம்பாலில் வராதுவந்தாலுந் தொழுதிடுமே ... ... (கஎ)

ஆணியந்தோறுஞ் சிவகிரிவேலன்ற னாறெழுத்தைத் ... ... ... *
தாணியம்பன்பர்க்குச் சம்பத்துமுத்தித் தலமுஞ்சர்வ ... ... *
மாணியமாமன்றிப் பேய்பூதஞ்சூத்திர மாறும்பில்லி ... ... ...*
சூனியமென்பவை யெல்லாம்வெறுஞ்சுத்த சூனியமே ... ... (கஅ)

முந்தவினையும் பிணிக்காடளிக்கு மூலையெனச்சொன் ... ... *
மந்தவினையும் வாதாதிவினையும் வருகிரகப் ... ... ... *
பந்தவினையும் பூதாதிவினையுமிப் பாரினினி ... ... ... *
யெந்தவினையுந் தண்டாயுதன்பேர்சொல வேகிடுமே ... ... (கக)

வாடுஞ்சிலவினை நாமிருந்தாலிடர் வந்திடுமென் ... ... ... *
றோடுஞ்சிலவினை யெவ்விடஞ்செல்வமென் றோடவழி ... ... *

தேடுஞ்சிலவினை நாளும்வரோமெனச் செப்பியங்கை ... ... *
போடுஞ்சிலவினை வையாபுரியன்வெண் பூதிகண்டே ... ... (உ0)

ஆறிடுஞ்செஞ்சடி லர்க்குப்பிரணவத் தத்தமுனங் ... ... *
கூறிடுஞ்செங்கனி வாயனசுரனைக் கூறிடக்கூ ... ... *
றேறிடுஞ்சத்திப் படையான்பழனிக் கிறைதரும்வெண் ... ... *
ணீறிடும்போதுவன் னோய்களெல்லாம்வெந்து நீறிடுமே ... (உக)

கடிபடுமாங்கனி பாகற்கனிகத லிக்கனிகள் ... ... ... *
வெடிபடுந்தோறும் பெருகியதென்பெரும் வெள்ளமதாய் ... ...*
முடிபடுகாற்றை வளர்க்கும்பழனிநம் முத்தையன்வெண் ... *
பொடிபடும்போது வினைக்கூட்டமியாவும் பொடிபடுமே ... (உஉ)

விளைத்தமருந்தன்பர்க் கின்னைபக்கிரவுஞ்ச வெற்புருவத் ... ... *
துளைத்தமருந்திட ரின்றென்றமரரைத் தொன்னகர்வாய் ... ...*
வளைத்தமருந்தெழி லாரும்பழனி மலைமுகட்டில் ... ... *
முளைத்தமருந்தஃ தென்வினைநீக்கு முதன்மருந்தே ... (உங)

அற்றுரைத்தாங்கும் பழனியப்பாவிவ் வடிமைதனக் ... ... *
குற்றுருமற்றுள்ள பேருமுனையன்றி யுண்டுகொலோ ... *
பொற்றுமரைப்பதந் தந்தாளவேண்டும் புனத்திலுறை ... *
முற்றுமுகிழ்முலை வள்ளிக்குவாய்த்திடு முத்தையனே. ... (உச)

இறுக்குங்கயிறு கொடுமேதிமேல்வந் திடுஞ்சமனை ... *
மறுக்குமுற்சஞ்சிதத் தாலூசல்போல வரும்பவத்தை ... *
யறுக்குமெய்ஞ்ஞான சுகத்தையளிக்குநல் லன்பர்பிழை ... *
பொறுக்கும்பழனி மலைத்தண்டபாணிதன் பூங்கழலே ... (உரு)

கோளைப்புரியு மசுரர்குலாந்தகன் குன்றெறிந்தோன் ... *
வேளைப்பொடித்தவர்க் குண்மையைப்போதித்த மெய்க்குரவன் ... *
பாளைக்குழல்வள்ளி மோகன்பழனிப் பதிமுருகன் ... *
றாளைத்தினமுந் தொழுவார்தமக்கொரு தாழ்வில்லையே... ... (உசா)

பார்வந்துறினு மிமையாவிழிபெற்ற பண்ணவர்தம் ... ..*
ஊர்வந்துறினு மகிழேன்மகிழ்வ னுனதருட்கே ... ... *
யேர்வந்துறுங்குற மாதர்தங்கூந்த லினமெனத்தண் ... *
கார்வந்துறும்பொழில் சூழ்பழனுபுரிக் காவலனே ... ... (உஎ)

அனத்துறுவானு மரியுமறியா தவன்கடம்ப ... ... *
வனத்துறைவான்வைத்த சங்கத்தொருநா வலனவில்பா ... *
வினத்துயர்பாவின வித்துயர்தீர்த்த விறைவனென்றன்... ... *
மனத்துயர்தீர்த்தருள் செய்வாய்பழனி மலைக்குகனே ... (உஅ)

கோழையுருதிந் திரவாழ்கவென்றுமுன் கூறுதெய்வம் ... ... *
பேழைவயிற்றைங் கரன்றுணையாய பெரியதெய்வம் ... ... *
மாழைவிழிக்குற மான்மகிழ்தெய்வம் வணங்குகின்ற... ... *
வேழைகடெய்வ மதுபழனித்தெய்வ மென்றெய்வமே ... (௨௯)

சீராருநின்றிருப் பேரருளன்றிச் சிறியனுக்கிங் ... ... *
கோராதரவு மிலையென்மனத்துன் பொழித்தருளாய் ... ... *
வாராரிளமுலை வள்ளிக்கொடிபடர் வான்றருவே ... ... *
கூராரயிலவனே பழனாபுரிக் கொற்றவனே ... ... ...(௩0)

எந்தாயுனையன்றி வேறுபுகலிட மில்லையென்றன் ... ... *
சிந்தாகுலங்கெடக் கண்பார்த்தருள்சிவ காமியருண் ... ... *
மைந்தாவமரர் கணந்தாதுறவடி வேலெடுத்த ... ... ... *
கந்தாபழனிப் பொருப்பிலுறையுமெங் கண்மணியே ... ... (௩௧)

*

ஏவனைமைக்கட் குறத்திமணாளனை யெங்கிருந்து ... ... ... *
பாவனைசெய்யினு மங்குநிற்பானைப் பசுங்கடப்பம் ... ... *
பூவனைப்பன்னிரு வாகனையும்பர் புகழ்பழனித் ... ... ... *
தேவனைநாளும் பணிவார்தமக்கொரு தீங்கில்லையே ... (௩௨)

அய்யநற்பூசா விதிப்படிநின்னை யருச்சனையான் ... ... *
செய்யமெய்யன்பு சிறிதுமின்றுன்வசஞ் சிந்தையைவைத்... ... *
துய்யவென்றுற்கொடும் பாழுமனமொட் டுவதிலையிவ் ... *
வெய்யபிறப்பென்ற கல்வேன்சிவகிரி வேதியனே ... ...(௩௩)

இரங்கிமிகவுந் தவிக்குந்தமியே னிடரகல ... ... ...*
விரங்கியஞ்சேலெனத் தேற்றியுய்ரின்ப மீதனிற்சே ... ... *
பரங்கிரிமாதுமை பாலாபழனிப் பருப்பதத்தும் ... ... ... *
பரங்கிரிசெந்திற் பதியுளுநின்ற பரஞ்சுடரோ ... ... (௩௪)

காற்றுறுமத்தனை போனெஞ்சுடைந்தே கலங்குமெம்மைத் ... ... *
தேற்றுவரியாவ ருனையன்றியைய திருக்கண்வைத்தாள் ... *
கூற்றுருளப்பதத் தாற்குமைத்தார்தங் குமரவுயர் ... ... *
மாற்றுறுபொன்னெயில் சூழும்பழனி மலைக்கொண்டலே ... (௩௫)

எளியேனுளமறிந் தும்மினஞ்சோதித் திடலழகோ ... ... *
அளியேநிறைந்தொளி ரீராறுநாட்டத் தருமருந்தே ... *
துளியேததும்புமென் கண்ணீரைமாற்றிச் சுகமளித்தாள் ... *
ஒளியேபழனி மலைமேன்முளைத்த வொருமுதலே ... (௩௬)

அகலநின்றேனை விரித்திடலைய வடியனுக்குப் ... ... *
புகலிடம்வேறில்லை நின்னையல்லாது புரந்தருள்வாய் ... *

இகலவுணக்குலவேர்முற்றுங்கல்லி யிமையவர்வாழ் ... *
அகலிடங்காத்தவென் வாழ்வேபழனி யயிலவனே ... (௩௭)

எண்ணுதெல்லாமிக வெண்ணியெண்ணித்தளர்ந் தேங்கிநெஞ்சம் *
புண்ணுகவாடிய நாயடியேனைப் புரப்பவரார் ... ... *
நண்ணரும்பேரரு ளாளாசதுர்மறை சாற்றிய ... ... *
அண்ணபழனியப்பா வடியேனுன் னடைக்கலமே ... ...(௩௮)

வலையுளகப்பட்ட மான்போலென்சிந்தை வருந்திமிக ... *
வுலைவுகொண்டல்லும் பகலுந்தளர்கின்ற துன்னையன்றி ... *
நிலைபெறவைப்பவ ரில்லையநீத நிலையளித்தாள் ... *
மலைமகளீன்ற குழந்தாய்பழனி மலையமிர்தே ... ... (௩௯)

நீக்கமில்லாக்கொத் தடிமைகொண்டாயெம்மை நீடருளாற் ... ...*
காக்கநிற்கேகட னன்றியிங்கார்க்குக் கடனையனே ... *
கோக்களெய்க்காதொரு குன்றெறிந்தான்றன் குலமருகா ... *
மாக்கவிவாணர்க் கருளும்பழனி மலைக்கந்தனே ... (௪0)

பெரும்பிழையேசெய்த பாவியென்றென்னைப் பிரித்துவிட்டாற் ... *
திரும்பியென்னைமுகம் பார்ப்பவரில்லைத் திருக்கணையத்தாள்... ...*
கரும்பினுமின்மொழிக் குஞ்சரிக்கேற்றநற் கட்டழகா ... *
சுரும்பிவர்சந்தனக் காவார்பழனித் துரைச்சிங்கமே ... (௪௧)

இங்கணங்கியாது கொலன்பரிடர்களைந் தின்பருளக்... ... *
கங்கணங்கட்டிய வையாபுரிக்கதி காரனும்பர் ... ... *
தங்கணங்காத்த விசாகனவன் றனைபுதைத்தோன் ... *
அங்கணங்கிப்பொறி யாய்வந்துதோன்ற லடியவர்க்கே ... (௪௨)

கருங்கடலிற்றிசை மாறிச்சுழலுங் கலமெனவே ... ... *
பருங்கவலைக்கட லாழ்ந்தேசுழலுமிப் பாவிதனை ... ... *
அருங்கமலப்பதத் தோணிதந்தஞ்சலென் றுதரிப்பாய் ... ... *
நெருங்கலர்வான்பொழில் சூழ்பழனபுரி நின்மலனே ... (௪௩)

உன்றனடிமையைக் காக்கப்பொறுப்புனக் கென்றுணர்ந்தும் ... *
என்றனவல மதியாற்பினுமுறை யிட்டனன்மா ... ... *
குன்றனதோளவிக் குற்றம்பொறுத்தருள் கோகநகந் ... ... *
துன்றனவாவி புடைசூழ்பழனிச் சுகமுகிலே ... ... (௪௪)

காமவிகாரனை மூடனையுன்றன் கழல்பணிவார் ... ... *
நாமநினையாக் கொடியனையாண்டிடு நாளுமுண்டோ ... *
சேமநிதிக்குவை யேயுயர்தெய்வ சிகாமணியே ... ... *
பூமலரோடை நெருங்கெழில்வையா புரிக்கரசே ... ... (௪௫)

சிறந்திடுங்கற்பின டன்பதியைமறந் தேயுய்யினும் ... ...*
பிறந்திறவாநெறி பேச்சற்றிடமெனப் பேதைமயல் ... ... *
துறந்திடவந்தருள் செய்தசிவகிரித் தூயவனை... ... ... *
மறந்திமைப்போது முய்யாதென்றனுள்ள மிவ்வையகத்தே ... (௪௬)

நீயேபராமுக மாயிருந்தாலிந்த நீணிலத்தில் ... ... ... *
நாயேனையாவர் புரப்பர்கண்டாய்விண் ணைகரளித்த... ... *
தாயேகருணைச் சமுத்திரமேசிவ சங்கரிதன் ... ... ... *
சேயேபழனிக் கிறையேகுருபர தேசிகனே ... ... (௪௭)

அன்றேயுடல்பொரு ளாவியிம்மூன்று மளித்தனன்வயம் ... ... *
நின்றேனையாவர் புரப்பனென்னைய நிகழ்த்துகபொற் ... *
குன்றேயனைய முலைவள்ளிபங்கவிவ் கோச்சுரருண் ... ... *
டென்றேசொலவயி லேந்தும்பழனிக் கிறையவனே ... (௪௮)

மெய்யாயகல்லடி யாருடன்கூடிநின் மென்பதத்தைக் ... ... *
கையாரான்மல ரிட்டிறைஞ்சாது கருத்தழிந்து... ... ...*
மையார்விழிச்சிய ராற்கெட்டபாவியை வாழ்வித்தருள் ... *
ஐயாபழனி மலைக்குரசேயுன் னடைக்கலமே ... ... (௪௯)

விண்கலக்கந்தவிர்க் கக்கதிர்வேல்தொட்ட வீரவென்றன் ... *
கண்கலக்கந்தவிர்த் தாள்வதுன்பாரங் கழறலென்னே ... ... *
மண்கலக்குங்கட லுண்டாரகத்து மணிவிளக்கே ... ... *
பண்கலக்குந்தமி ழாளாபழனியெம் பண்ணவனே ... (௫௦)

நெய்வைத்தவேற்படைக் கோவையென்வாழ்வை நிராமயத்தைச் ... *
சைவத்தொருமுத லைப்பரமானந்த சாகரத்தை ... ... *
மைவைத்தசோலை மலைச்செங்கரும்பை மலைப்பழனித் ... ...*
தெய்வத்தைவாழ்த் துவரோசிவபோகத்திற் சிக்குவரோ... ... (௫௧)

எழுந்திமைப்போதிலெங்கும் போய்த்திரும்புமென்னெஞ்சமுன்பா *
லழுந்திக்கிடந்திடு நாளுமுண்டோவரி மார்பிலுறை ... *
செழுந்திருவாவினன் பூமாதுசனியுஞ் சித்தியுறத் ... ... *
தொழுந்திருப்பாதாம் புயனேபழனிச் சுகமுகிலே... ... (௫௨)

தேவாதிதேவன் திருப்பழனுபுரிச் செல்வனெடும் ... ... *
மாவாயசூரைப் பிளந்தவைவேலன் மலர்ப்பதத்தைப் ... *
பூவாலருச்சித் திறைஞ்சியுள்ளன்பொடு போற்றிலவன் ... *
காவாதிரானினி யென்கொனமக்குக் கவலைநெஞ்சே ... (௫௩)

திருந்தியவேதச் சிரத்துறுதாளென் றன் சிந்தையுள்ளும் ... ... *
பொருந்திச்சுகானந்த நித்திரைகொள்வதெப் போதையனே ... *

வருந்தியசங்கப் புலவைன்சிறைவிட்ட வான்பொருளே ... *
அருந்திருமாதுறை வையாபுரியி லமர்ந்தவனே ... (௫௪)

பாருக்கழகு நெறிவேந்தராளுகை பன்னுமறை ... ... *
யோருக்கழகு மகத்தழலோம்ப வுயர்பழனி ... ... *
யூருக்கழகு தெண்டாயுதபாணி யுறைவிடை ... ... *
யாருக்கழகு திருப்புகழ்பேசுத லாமெனபரோ ... (௫௫)

யாவன்முன்னெற்றியிற் கண்படைத்தார்க்கரு ளீந்துவந்தான் ... *
யாவன்புலவர் சிறையொழித்தானயி லேந்திநின்றான் ... ... *
யாவன்வரையற்ற சீவரைமுத்தியி லேற்றநின்றான் ... *
யாவன்சிவகிரி யுள்ளானவனெம் மிறையவனே ... ...(௫௬)

மனமுமவாவுங் குரோதமுங்காம மயக்கமும்வன் ... *
சினமுமொழிந்தந்த வாசனையும்விடிற் றேடரிய ... ... *
தனமுமிஃதெனச் சாற்றுஞ்சிவகிரிச் சண்முகன்றன் ... ...*
வனமுமறைத்துயர் சற்குருவாய்வந்து வாழ்விக்குமே ... (௫௭)

கானிடமாடி மகனைச்சிவகிரிக் காங்கயனைத் ... ... *
தானிடமாகவுஞ் சாரார்சடக்கரந் தன்னையுன்னார் ... ... *
வானிடர்நீக்கிய வேலைத்தொழாரிந்த வம்பொல்லாம் ... *
மானிடராகவந் தேன்பிறந்தாருயர் மாநிலத்தே ... (௫௮)

பொல்லாநமனுக்குந் தீர்க்குமியானை புலிகரடி ... ... *
யல்லார்கொடுவிடங் கட்குஞ்சற்றேனுமஞ் சாதெனுளம் ... *
எல்லாநலனையு நல்கும்பழனியெம் மான்புகழைச் ... ... *
சொல்லாதவரைக்கண் டால்மிகவஞ்சித் துடித்திடுமே ... ...(௫௯)

பங்கயவேதியன் பேச்சும்வெறுத்திடும் பன்னகப்பாய் ... *
தங்கரிவாழ்வு முறக்கத்தில்வீழுந் தருநிழலோ ... ... *
டங்கயிராவதுன் செல்வமுமுவந்து மந்தரமே ... ... *
யெங்கள்சிவகிரி நாதனயிலொன் றெடாவிடினே ... ... (௬௦)

கொடியமன்த்தர் புன்றைய்த்தசையூண்ர் செ லைப்புலையர் ... *
படியினரகுஞ் சகிக்காக்கொடும்பா தகரொ னும் ... *
வெடியலர்ச்சோலைச் சிவகிரிநாதன் விரைமலர்ச்சே ... ... *
வடியிறைஞ்சித்துதிப் பாரோல்வமொமக் காரியரோ ... (௬௧)

தந்தையெமப்புரட் டன்றுயுகீலி தமயனுமோர் ... ... *
முந்தமதங்கொண்ட வன்சொந்தமாமன் முழுத்திருடன் ... ... *
வந்தமனைவி குறத்தியென்றலிவ்வை யாபுரியான் ... *
எந்தவிதஞ்செட்டிற்றான் முதலாளியென் திங்குற்றதே... ... (௬௨)

வையுண்டவேற்பழ னிப்பரன்றாளின் மலர்சொரியக் ... *
கையுண் டிறைஞ்சிடச் சென்னியுண் டுன்னைக் கருத்துண்டுயர் ... *
மெய்யுண்டங் கப்பிர தக்ஷணஞ் செய்ய வினையுமுண்டோ ... *
மையுண்டநெஞ்சினர் போலென்கவலை மகிழ்நெஞ்சமே. ...(௬௩)

வடித்தவழகு மிளமையுமாண்மையு மாயிப்பன்றேனும்... ... *
தடித்தநரைதிரை மூப்புந்தொடர்வதைத் தானுணர்ந்துந் ... *
துடித்தநெஞ்சோடும் வையாபுரிநாதன் றொழும்புசெய்யீர் ... *
படித்தநூலுடையும்பயனென்கொல் பகர்மின்களே ... ...(௬௪)

கலைக்கலங்கார மொருநாற்பொருளைக் கழறுதல்போல் ... *
அலைக்கலங்கார மமுதந்தருவ தரும்பழனி ... ... *
மலைக்கலங்காரந் தெண்டாயுதபாணி வதிதலென்றன் ... *
றலைக்கலங்கார மவன்றிருத்தொண்டர்பொற் றாட்டுகளே ...(௬௫)

குன்றனை பன்னிரு தோளாபழனிக் குமாவுனன்ப ... *
னென்றனைவோர்க்கு முன்றாயேனலனிழந் தேயிருந்தால் ... *
என்றனைநோக்கிச் சிரிப்பாரொன் றுள்ளாத்தி லெண்ணுகிலேன்... *
உன்றனைநோக்கி நகைப்பரென்றேமன முட்குவனே ... ...(௬௬)

படுக்கையிலோவிற் கையிலோவருந்தலி லோபசும்பட் ... *
டுடுக்கையிலோமற்றெவ் வேளையிலோயம னோலைவந்தால் ... *
இடுக்கிடவீழுமிப் பொய்க்கூட்டைநம்பித் திகைத்திடவோ ... ...*
வடுக்கனெருதை யலைக்காத்தவையா புரிவள்ளலே ... ... (௬௭)

சோலைக்கடம்ப வனக்கவிராயன் சுதனைநற்பா ... ...*
மாலைக்கருளும் பழனிப்புலவனை வாழ்த்தல்செய்யா ... ... *
தோலைக்குச்சேத முறப்புல்லர்மேற்கவி யோதுகின்றீர் ... *
பாலைக்கமரி லுகுப்பருண்டோசொலும் பாவலரே ... (௬௮)

அனித்தமெனச்செல்வ மெல்லாந்துறந்தகப் பற்றும்விட்டார்க் ... *
கினித்தவுஞ்சீரரு ளுண்டினிவந்தெய் திடும்பொருட்டுந் ... ... *
சனித்தவவாமனப் பற்றுமுளேற்கது தானுமுண்டோ ... *
தொனித்தமறைமுடி வாயபழனிச் சுடர்க்கொழுந்தே ... (௬௯)

துன்பமுழுதுமின் பாக்காட்டுமாயைத் தொழிலதனை ... *
யின்பமென்றெண்ணற்க விட்டவிடமின்ப மென்றிசைத்தும் ... *
வன்புறுமென்ற னவலமதியான் மயங்குகின்றேன் ... *
தென்பழனாபுரி யாருஞ்சிவகுரு தேசிகனே ... ...(௭0)

காலாவுனையெட்டிக் காலாலுதைத்த கடவுளர்க்கு ... *
மேலாயவுண்மை நவிற்றும்பழனி விமலனன்பர் ... ... *

பாலாகவோடி வரோல்வரின்முன்பட்ட பாட்டோடன்றித் ... *
தோலாவிறைமையுந் தோற்றுடன்பூண்மை துணைவிலங்கே. ... (௭௧)

மன்னையல்லாற்கதி யில்லைக்குடிக்கு வளர்த்திடுமோர் ... *
அன்னையல்லாற்கதி யில்லைநற்செய்க்கிரு ளாசிரியன் ... *
றன்னையல்லாற்கதி யில்லைமெய்ச்சீடர்க்குச் சாருமெனக் ... *
குன்னையல்லாற்கதி யில்லைச்சிவகிரி யுத்தமனே... ... (௭௨)

ஞாலக்கம்பெறுந்திருத் தொண்டர்க்குற்றேவல்செய் தொண்டன்மனக் *
கலக்கந்தெறவருள் செய்வாய்பொன்னூட்டுறை காவலன்றன் ... *
குலக்கன்றிடங்கண விற்சென்றருள்மொழி கூறியன்றோன் ... *
அலக்கண்டவிர்த்த வென்னையாபழனிச் சுகானந்தனே ... ... (௭௩)

உன்னைநினைப்பவர்க் கில்லையிடரொன் றுறுதியுமுண் ... *
டென்னைவருத்து மித்துன்பாற்கலச்குண் டியம்புகின்றேன் ... *
அன்னையினும்பரிந் தாதரித்தாய்முற்று மாதரித்தாள் ... *
பொன்னையுரத்தில்வைத் தோன்றொழும்வையா புரித்துரையே. ... (௭௪)

பாழ்வேதனையுந் தொலையுநமக்கிந்தப் பாருலகிற் ... ...*
ருழ்வேதுமின்றிச் சுகானந்தவாழ்வையுஞ் சார்ந்துய்யலாம் ... *
ஆழ்வேலையுண்டார்க் கியற்றமிழோது மரும்பழனி ... ...*
வாழ்வேயுயிர்க்குயிரோ யென்றுவேலனை வாழ்த்துவிரோ ... (௭௫)

வையமும்வானமு மற்றுள்ளவண்டத்தின் வைப்புகளுஞ் ... *
செய்யநிலைபிறழ் வித்துமுன்போலுறச் செய்யுமெனில் ... *
ஐயநின்பேரருள் வல்லபமாரோ யறிவர்குறத் ... ... *
தையலுக்கேற்றம ணாளாபழனிச் சரவணனே... ... (௭௬)

கள்ளத்திருக்கு மனத்தனசடன் சசடனுல ... ... *
கெள்ளத்திரியும் புலையனென்றெண்ணி யெனக்கைவிடேல் ... *
வள்ளக்குவிமுலைக் கொச்சக்குறத்தி மகிழ்கணவா ... *
அள்ளற்பழனப் பழனியப்பாவுன் னடைக்கலமே ... ...(௭௭)

ஆற்றுநெடுந்துயர் கொண்டேயுழலிவ் வடிமையைநீ ... *
தேற்றுவிடினுய்வ தெங்ஙனமைய திருவருள்கூர் ... ... *
ஊற்றுனவின்பக் கடலேசெழிய னுடற்பிணியை... ... *
நீற்றுலொழித்த குருந்தேபழனியு னின்றவனே ... (௭௮)

தீதுறுமைவ ரிடத்தொப்பித்தென்னைச்சோ தித்ததெல்லாம் ... *
போதுமெனைய வினியேனுமின்பம் பொருந்தவைத்தாள் ... ... *
கோதுணராதண்டர்க் காவோர்திருவுருக் கொண்டவனே ... *
போதுறைதண்டலை சூழும்பழனிப் புரவலனே ... (௭௯)

விருப்பாயவன்ப ருளத்தார்ந்தன்னோர்க்கின்ப மேவிளைப்பா ... *
யிருப்பாயவன்னெஞ்சத் தார்ந்தெமக்கெவ்வண மின்பளிப்பாய் ... *
மருப்பாயகண்டங்கொண் டைந்தாமறையை வரைந்தமுக்கட் ... *
பொருப்பாயதந்திக் கிளையோய்பழனிப் புராதனனே ... (௮0)

நாடிக்கைகூப்பு மெனைப்பவக்காட்டி னலியவிட்டு ... ... *
வேடிக்கைப்பார்ப்ப தழகோவென்னைய மெலிவொழித்தாள் ... *
ஆடிக்கைகொண்டசைப் பான்போலகில மெலாமசைத்து ... *
வேடிக்கையாக நடிகருஞ்சிவகிரி வித்தகனே ... ... (௮௧)

அலையுமென்றுட்ட மனதைநின்பொற்கழற் காக்கியின்ப ... *
நிலையுந்தமியேன் பெறவைப்பையோமிக நீண்டெழுந்த ... *
மலையுங்கடலு நிருதருந்தூள்பட வானவர்தந் ... ... *
தலையும்பெறவயி லேந்தும்பழனிச் சரவணனே ... ... (௮௨)

தேனேயனைய மொழிவள்ளிபங்கன் றிருப்பழனிக் ... ... *
கோனேநமதண்ண லென்றவன்சீர்த்தியைக் கூறின்மக ... *
வானேவிடதிசை யோனேயென்றேகிடும் வாழ்வுனக்குத் ... *
தானேவலியவந் தெய்துமுக்காலுஞ் சரதமிதே... ... (௮௩)

துன்பப்புணரி தணந்துநின்றாளெனுந் தோணிபற்றி ... ... *
யின்பப்பெருங்கரை யேறிச்சுகிப்பது மென்றுகொலோ ... ...*
முன்பக்கினித்தக ரேறியவ்வேள்வி முடிப்பித்தவா ... ... •
அன்பர்க்கிரங்குந் திருப்பழனாபுரி யாண்டவனே ... (௮௪)

வாதுசெய்சூரனை வாட்டியவேலுன் வசத்திருக்க ... ... *
வேதுறுதீவினை யென்பாலிருக்க விதியுமுண்டோ ... ... *
போதுறைவான்முத லண்டரிடரைப் பொடித்தமலை ... *
மாதுமைகொஞ்சிமுத் தாடும்பழனி மலைக்குருந்தே ... (௮௫)

வானரமொத்தலை கின்றவென்னெஞ்சஞ் சன்மார்க்கமுற ... *
ஞானமுமில்லையிப் பாவிக்கெவ்வாறுன் னலன்கிடைக்கும் ... *
கானமயின்முரு கோனேகுறத்திதன் காதலனே ... *
தீனதயாபரனே பழனாபுரிச் சேவகனே ... ... ...(௮௬)

பன்னருந்துன்பத் தழன்றேவருந்தும் படிறனை நீ ... *
யின்னமுஞ்சோதித் திடுதனன்றோபரிந் தேன்றுகொள்வாய் .. *
அன்னமும்பன்றியுங் காண்டற்கரிய வமலனருள் ... ...*
வன்னமயிற்பரி யானேபழனி மலைக்கந்தனே ... ... (௮௭)

வியனுறுசஞ்சிவி வெற்பையுற்றோர்க்கு வினையுமுண்டோ ... ...*
நயனுடைக்கற்பகக் காவடைந்தார்கட்கு நல்குரவோ ... ... *

பயனருள்தெய் பழ னிக்குமராநின் பதம்பணிவார்க் ... *
கயனெழுத்தென்ப தொன்றுண்டோவிஃதென்ன வற்புதமே ...(அஅ)

மனமேயுனக்குப நேசமொன்றுண்டு வழுத்துவன்கேள் ... *
கனமேதவமுஞ் சிவகிரியானைக் கருதுமன்ப ... ... *
ரினமேநஞ்சுத்தமென் றெண்ணெண்ணின்மெய்ப்பொரு ளென்பதையித் *
தினமேயடைகுவை வித்தாகியசஞ் சிதமுமின்றே ... (அக)

தூண்டருஞானச் சுயஞ்சோதியைமெய்ச் சுகக்கடலை ... ... *
நீண்டபுகழ்ப் பழநுபுரிவாழ்வை நிறையருளே... ... ...*
பூண்டசிவோக நிலையாநம்மைத்தொடர் புன்கணொழித் ... *
தாண்டவடிகளை வாழ்த்துநெஞ்சேமுத்தி யார்வதற்கே ... (கய)

தாங்காநெடுந்துயர் நீக்கியென்னெஞ்சநின் றுணமலர்க்கீழ் ... *
நீங்காதுறவோ ருளவுசொல்வாய்முத்தர் நின்றுதொழு ... ...*
மோங்காரபஞ்சர கிஞ்சுகமேவின் னுலகையுணும் ... ... *
பூங்காவனஞ்செறி தென்பழநுபுரிப் புங்கவனே ... (கக)

பூவினுயர்குன் றுகடோறுமெல்லப் பொருந்தமனாக்... ... *
காவிமலர்ப்பதம் வைத்துப்பயிலல்வன் கல்லையொத்த ... ... *
பாவிமனத்தி லிருத்தற்குன் றொழும் பத்தர்களைக் ... *
கூவியுயரின் பருளும்பழனிக் குறலையனே... ... ...(கஉ)

அருவையெனன்னை யெனன்பிலெழுந்தவ நீதவின்ப ... *
வுருவையுலகெங்கு நீக்கமறநின்ற வொன்றைமலர் ... ... *
மருவைவடவா வுறைநாதர்க்குண்மை வழிதெரித்த ... *
குருவைவையாபுரி யிற்கண்டபின்கண் குளிர்ந்ததுவே ... (கங)

எவ்வளவென்றென் மனக்குறைதன்னை யெடுத்துரைப்பேன் ... *
அவ்வளவும்மைய வுன்றனருளறி யாததன்றே... ... *
தெவ்வளவைக்குறி யாதநிந்தி, திருக்கண்வைத்தாள் ... ... *
செவ்வளமுற்று நிறைபழநுபுரித் தேசிகனே ... ... (கச)

அடைக்கலம்புக்க வெமையும்வினைக ளடர்வனவோ ... *
கடைக்கணருள்புரிந் தாதரிப்பாய்கடற் றுனையொடும்... ... *
புடைக்கருஞ்சூரை விபுதர்கொண்டாடப் பொடித்தவைவேற் ... *
படைக்கரனே கருணாகரனே பழனிப்பரனே ... ... (கரு)

நல்லார்குழற்காவி னிற்சிக்கிக்கொங்கை நகத்திடுக்குற் ... ... *
றெல்லாமுழுகு நிதம்பமடுவுக் குளேசுழலும் ... ... *
பொல்லாவென்றுட்ட மனப்பேய்க்கொருதளை பூட்டிவைத்தாள் ... *
அல்லார்பொழிற்பழ னிச்சித்தனேமந்திராதிபனே ... (கசு)

கையார்ந்திடுஞ்சென்னி மீதுவிழிநீர் கரைபுரளும் ... *
மெய்யாவிதிர்விதிர்க்குங் கருங்கன்னெஞ்சும் வெவ்வழல்வெண் *
ணெய்யாயுருகுஞ் சொன்னாத்தழும்பேற நிகழ்த்துமெங்கள் ... *
வையாபுரியனைக் கண்டமரத்தன்மை மாந்தர்க்குமே. ... (௧௭)

கோழைக்குட்சிக்கிய வீப்போலநெஞ்சங் குழைந்தழலு ... ... *
மேழைக்கிதுநெறி யென்றோருபாய மியம்புகண்டாய் ... *
மாழைக்கண்ணார்மஞ்ச ளாடியநீரின் மணம்பெருகி ... ... *
ஆழைக்கடல்மண மாற்றும்வையாபுரி யாள்பவனே ... (௧௮)

சீற்றச்சமனுடைக் குங்கருப்பாண்டத்தைத் தீயகும்பி ... ... *
நாற்றச்சடத்தை யிடுகாட்டுக்காட்டத்தை நாய்நரியுண் ... *
சோற்றுத்துருத்தியைச் சிட்டிதுடங்கிச் சுமந்துசுமந் ... ... *
தாற்றப்படுதிலைக் காப்பாய்பழனி மலையண்ணலே ... (௧௯)

பெருவானமும்புவி யாவுந்தனக்குட் பிறங்கிடவோர் ... ... *
உருவானவன்பழ னிக்குகனம்முளத் தூன்றுமின்பந் ... ...*
தருவானழற்கட் கொடுங்கால்வருமத் தனிமயின்மேல் ... *
வருவானதற்கைய மில்லையவன்புகழ் வாழ்த்துநெஞ்சே ... (௨௰)

குருமணியே சுப்பிரமணியேயிரு கோதையர்க்காம்... ... *
ஒருமணியே யொப்பிலாமணியே யுமையாளளித்த ... ... *
அருமணியே யெளியேற்கின்பருள வணிமயின்மேல் ... *
வருமணியே சரணம்பழனிப்புரி மாமணியே. ... ...(௨௰௧)

மாலை - முற்றியது.

உ

வேலுமயிலுந்துணை.

# மலை மருந்து.

சீரார்பழனி மலைமேற்றழைத்தெழுஞ் செம்மருந்தால் ... *
தீராப்பிணிதீர்ந் திடுமட்டசித்தியுஞ் சித்திக்கும்பின் ... ... *
வாராப்பெருஞ்செல்வ மெய்துமதெவ்விதம் வாய்க்குமெனில் ... *
ஆராதனைக்கு ளகப்படுங்கண்டோ ரறிவர்களே ... ... (௧)

காலையுதைத்த மருநதிற்கிளைத்த கனமருந்து ... ... *
வாலையிடத்தினில் வந்தமருந்தென்றன் மம்மொந்த ... ... *
மூலையினுந்தங்க வொட்டாதகற்று முதன்மருந்து ... ... *
மாலையொழித்தவர்க் கெய்தும்பழனி மலைமருந்தே ... ...(௨)

போற்றுமருந்திந்த வேழைமனத்துயர் போக்கியிளைப் ... *
பாற்றுமருந்தினைப் பாற்றியபின்ன ரழகுறவே ... ... *

தேற்றுமருந்தது தேற்றியபின்னர் சிவோகநிலை ... ... *
யேற்றுமருந்தது தென்பழனிப்பதி யின்மருந்தே ... (ரு)

விருப்புமருந்தன்பர்க் கின்புறத்தண்ணளி வீசமதே ... *
நெருப்புமருந்தசு ரர்க்கும்வினைக்கு நெடும்படைவீட் ... ... *
டிருப்புமருந் தென்னைப்பெண்ணுக்கிய மருந்திப்பழனிப் ... ...*
பொருப்புமருந்தெம்மை யாதரித்தாளும் புகழ்மருந்தே ... ... (ச)

உருக்குமருந்தது தொண்டருளத்தை வல்லூழ்வினையைக் ... *
கருக்குமருந்து வள்ளிக்கொடிசுற்றுங் கனிமருந்தும் ... ... *
பருக்குமருந்தவர்க் கும்மாமருந்திப் பழனிவெற்பில் ... *
இருக்குமருந்தது நாயேன்றுயர்நீக் கிடுமருந்தே ... (ரு)

தேடுமருந்தஃ தாரணமின்னுந் தினமுமன்பர் ... ...... *
நாடுமருந்தஃ தண்டர்சிந்தாகுல நாசமுறச் ... ... ... *
சாடுமருந்தஃ தொண்பழனிக்குட் டனிமயின்மீ...... ... *
தாடுமருந்தஃ தென்னைப்புரந்த வருமருந்தே ... ... (சா)

நித்தமருந்தகி லாண்டவடுக்கி னிலைகளைப்பே ... ... *
தித்தமருந்தவை யாவுமுன்போலுறச் செய்தபரி ... ... *
சுத்தமருந்தது தென்பழனிக்குன்றிற் றேற்றுவதெற் ... *
கொத்தமருந்தது தன்னையொழித்த வொருமருந்தே ... ... (எ)

ஆக்குமருந்த தளிக்குமருந்த தவையிலதாய்ப் ... ... *
போக்குமருந்தென்றும் போகாமருந்திப் புலவருண்டு ... *
தேக்குமருந்திந்த நாயடியேனைத் திருவருளாற் ... ... *
காக்குமருந்தது தென்பழனுபுரிக் கண்மருந்தே ... ... (அ)

வடிக்குமருந்தயிலால் வானர்க்காகவன் மாமலையைப்... ... *
பொடிக்குமருந்தெழிற் குஞ்சரிகாண் குறப் பொன்மயின்மேல் *
நடிக்குமருந்தடியே னெண்ணமியாவையு நன்குறவே ... *
முடிக்குமருந்திப் பழனியிற்றேன்று முதுமருந்தே ... ... (கூ)

விதிக்குமருந்தன்ப ருன்னுந்ததிமயின் மீதுவந்தே ... *
குதிக்குமருந்தத்தி யின்பின்செழித்துய ருங்குருந்தா ... ... *
யுதிக்குமருந்திப் பழனியிற்சித்தரொல் லோருநின்று ... *
துதிக்குமருந்தது காணம்மைமக்காக்குஞ் சுயமருந்தே ... ... (க0)

மலைமருந்து - முற்றியது.

---

வேலுமயிலுந் துணை.

## தேசிகக்கன்னி.

நீருலவுமண்டநிகிலவடுக்கும்பலவாஞ் ... ... *
சீருலகுந்தந்தளித்ததென்பழனிதேசிகனே ... ... (க)

தானேசெழித்ததனிமுக்கட்செங்கரும்பின் ... ... *
தேனேமணப்பாகேதென்பழனித்தேசிகனே. ... (௨)

கூடரியவின்பக்குணக்குன்றேயெவ்வுலகுந் ... ... *
தேடரியசெல்வமேதென்பழனித்தேசிகனே. ... (௩)

பூவிலுனக்காளாப்புகுந்தவொருஏழையித்... ... *
தீவினைக்காளாக்கனன்றோதென்பழனித்தேசிகனே, ... ... (௪)

இத்தரையில்வன்மாயையேகமருந்தொன்றிலையோ ... *
சித்தர்களெல்லாம்பரவுந்தென்பழனித்தேசிகனே. ... ... (௫)

ஆற்றுநடுக்கோரையைப்போலாகியவிப்பாவிதனைத் ... *
தேற்றுவரியார்நின்னையன்றித்தென்பழனித்தேசிகனே. ... (௬)

தொகைக்குளடங்காத்துயராலெளியேன்... ... ... *
திகைப்பதுனக்கழகோதென்பழனித்தேசிகனே... ... (௭)

பாம்பின்வாய்த்தேரையைப்போற்பாழ்த்தவினையாலடிமை ... *
தேம்பிவருந்தத்தகுமோதென்பழனித்தேசிகனே. ... (௮)

இம்மாநிலத்திலிந்தவேழைக்கிரங்குவரியார் ... ... *
செம்மான்மகண்மருவுந்தென்பழனித்தேசிகனே. ... (௯)

பொல்லாவினைக்கிடமிப்பூவிலெனையன்றியின்றே ... ... *
செல்லாரும்பூம்பொழில்சூழ்தென்பழனித்தேசிகனே. ... (௰)

இக்குவலயத்துன்னிணையடியையன்றியொரு ... *
திக்கெனக்குண்டோபுகலாய்த்தென்பழனித்தேசிகனே. ... (௰௧)

புவியிலிந்தவேழைபுலம்புவதெல்லாமுன் ... ... *
செவியிலேறுததென்றோதென்பழனித்தேசிகனே. ... (௰௨)

உய்வதிந்தநாயேனுனதருளாலன்றியினிச் ... ... *
செய்வதொன்றுமியானறியேன்தென்பழனித்தேசிகனே. ... (௰௩)

மெத்தமெலிந்துன்விரைத்தாள்சரண்புகுந்தேன் ... *
சித்தமிரங்கியருள்தென்பழனித்தேசிகனே. ... (௰௪)

கார்வாழிபத்தகணம்வாழிநின்னருளின் ... ... ...*
சீர்வாழிவேல்வாழிதென்பழனித்தேசிகனே. ... ...(௰௫)

தேசிகக்கண்ணி — முற்றியது.

---

வேலுமயிலுந்துணை.

## தாலாட்டு.

மங்களஞ்சேர்வேழமுக வள்ளறனக்கிளைய ... ... *
எங்களரசோ வெழிற்பழனி நாயகமோ. ... ... ...(௧)

பச்சைக்கொடிதோய் பவளமலைக்குளக்கண் ... ...*
இச்சைதருமுளைத்த வின்பச்செழுங் கரும்போ. ... ... (௨)

இளைத்தமலையரையன் செய்தவத்தாலன்று... ... ...*
முளைத்தகொடியிற்பழுத்த மூதருண்ஞானக் கனியோ. ... (௩)

எவ்விடத்தினின்றுதொண்ட ரேத்துகினுந்தோகைமிசை ... *
அவ்விடத்திற்றோற்று மரும்பழனியாரமிர்தோ. ... (௪)

அருமுலைப்பாலாத்தரத்து மச்சுதனார்தங்கைத் ... ... *
திருமுலைப்பாலேமணக்குஞ் செம்பவளவாய்க் குருந்தோ. (௫)

சீரியபொற்றண்டைச் சிலம்பொலிக்கவத்தர்மகிழ் ... *
நாரிமடிமீது நடைபழகும் பாலகனே. ... (௬)

வளைசேர்சரவணப்பூ மஞ்சமிசையண்டர் ... ...*
தளையவிழமுன்னனந் தவழுந்தவக்கன்றே. ... ... (௭)

தொந்திவயிற்றண்ணன் றுதிக்கைதனையூசலென ... ... *
அந்தமுறவேறிவிளை யாடுமருமணியோ. ... ... (௮)

மெய்ப்பார்குலகிரியு மேருவுங்குலுங்கமுனஞ் ... ... *
சப்பாணிகொட்டுந் தமிழ்ப்பழனிக் காங்கெயனே. ... (௯)

ஓங்காரபஞ்சரத்தி னுள்ளுமன்பர்சிந்தையுள்ளும் ... *
பாங்காயுறையும் பழனிமலைப் பைங்கிளியோ. ... ... (௰)

வீசுதவக்கொத்தோ விளம்பருமெய்ஞ்ஞானவித்தோ ... *
மாசிலாச்சித்தோ வளர்பழனியாணிமுத்தோ. ... (௰௧)

என்னத்துதிக்குமன்ப ரெல்லோருமீடேற ... ... *
வன்னமயிலேறி வரும்பழனிச் சண்முகனே. ... ...(௰௨)

தாலாட்டு முற்றியது.

---

வேலுமயிலுந் துணை.

## கிளிப்பத்து.

சீராரைங்கரன்மகிழ்சிலன் சிவசங்கரியருள் சிறுபாலன் ... *
பேரார்கடவுட்பிடிலோலன் பிரமசுகந்தந் தருண்மூலன்... ...*
காராரவுணர்க்கொருகாலன் கழல்சேரடியார் பரிபாலன் ... *
ஏரார்பழனிக்கதிர்வேலன் இசையைக்கிளியே யிசையாயே. ... ...(௧)

முன்புறுதலைமையின்முன்னவனை முறையினிலிபமுகன் பின்னவனை ... *
அன்புறுமான்மகடன்னவனை யடியேற்கொருதாயன்னவனைக் ... *
கொன்புனைவேடுதியென்னவனைக் குறுமுனிக்கோர்பொருள்சொன்னவனைத்*
தென்பழனுபுரிமன்னவனைச் சிறையார்கிளியேயறையாயே. ... ...(௨)

தபமுயல்குறமகண்மகிழ்நேசன் சனகாதியர்துதியுபதேசன் ... ...*
நிபமகல்சிவசங்கரதேசன் நிலையுணரடியவர் பவநாசன்... ... *
இபமடருயர்கிரிதொறும்வாசன் எளியவர்மிசையுறு விசுவாசன்... *
சுபமுறுபழனிக்குமரேசன் சொல்லைக்கிளியே சொல்லாயே. ...(௩)

அலைமகளாசைத்திருமகனை யருணிறையொருமூ விருமுகனை ... *
நிலைபெறுமந்திரசொரூபகனை நிறைபரிபூரண சிற்சுகனை... ... *
சிலைநுதன்மலர்மகண் மருமகனைச் சிறியனையாண்டருள் பதயுகனைக் *
கலைவலர்துதிபழனிக்குகனைக் காதலுடன்கிளி யோதுவையே. (௪)

குவிமனவிருடியருணர்போதன் குறிகுணமகல்துரி யாதீதன் ... *
அவிர்குழையிலகுபன்னிருகாதன் அழகமர்நிசசொ ரூபவிநோதன் ...*
துவிதவல்வினைதெறவருணீதன் சூரர்முனிவரர்முடி தொடுபாதன். *
புவிபுகழ்பழனிப்பதிநாதன் புகழைக்கிளியேபுகழாயே. ... (௫)

துதியுறுமறைகட்கரியானைத் தொழுமடியவர்கட் குரியானை ... *
நதிபுனையிறைமகிழ்பெரியானை நடனமயூரப் பரியானைக் ... *
கதிதருகுடிலைப்புரியானைக் கசடர்விழிக்குத் தெரியானை ... ... *
மதிதவழ்பழனிக்கிரியானை வன்னக்கிளியே பன்னுதியே. ... (௬)

நொய்யாவரைபகுமாவலனை நொடியின்மஞ்ஞையில்வருபுவலனை *
ஐயார்குறமகளாவலனை அடரமராவதிக் காவலனைப் ... ... *
பொய்யாமொழியர் சொன்னாவலனைப் பூதாதிகெடினுந் தாவலனை *
வையாபுரியுறைசேவலனை வரையார்கிளியே யுரையாயே. ... (௭)

உரமலியவுணனையடுதீரன் உவணமயில்பரகதி யெனுமூரன் ... *
தரமுறுமைந்தொழிற்கதிகாரன் சருவவல்லபமமை கெம்பீரன் ... *
குரவொடுகுளிர்கடம்பிவர்தாரன் குலமணியொளிவிடுகேயூரன் *
சுரருறைசிவகிரிமயில்வீரன் துதியைக்கிளியே துதியாயே. ... (௮)

உருவாயருவாயுற்றவனை யுன்னுவர்பாற்சின மற்றவனைக் ... ... *
குருவாய்வந்தருணற்றவனைக் குடிலைக்குயர்பொருள் கற்றவனை ... *
மருவாநிலைநெறிசொற்றவனை மறுவில்பெரும்புகழ் பெற்றவனைத் *
திருவாவினன்குடிக்கொற்றவனைத் தேசார்கிளியே பேசாயே. (௯)

புரைதவிரறிஞர்களறிமெய்யன் பொய்ம்மையருக்கெல்லாம்பொய்யன் *
குரைகழலடியேற்கருள்துய்யன் கொடியநிசாசரர்பால்வெய்யன் *
பரைமகிழ்வுறநடமிடுசெய்யன் பங்கயனைக்குட்டிய கையன் ... *
தரைதுதிசிவகிரி முருகையன் சரணந்துதிவருணக்கிளியே. ... (௰)

கிளிப்பத்து முற்றியது - ஆக - ௰.

# குயிற் பத்து - கண்ணி.

இராகம் புன்னாகவராளி - தாளம் சாபு.

ஆனைமுகற்கிளையோ னும்பர் சேனைத்தலைவனெனும் - முரு ... ...*
கோனைச்சிவகிரித் தேனைவரும்படிக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்நீகுயிலே*

தாரகத்துள்ளொளியைத் திரு வேரகமாமணியை - எம்மைக் ... [லே
கோரபவம்விட்டின்பாரவைப்பான்வரக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்நீகுயி

மட்டுறுகந்தகிரி தனிற் சிட்டித்தொழிலயனைக் - கையாற் ... [லே
குட்டிச்சிறையிட்ட நெட்டயில்வீரனைக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்நீகுயி

பூதமுதற்பொருளா யவை யாதினுக்கும்புறம்பாய் - நின்ற ... [லே
கோதில்வையாபுரி நாதனிங்கேவரக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்நீகுயி

நம்புவர்க்கின்பசுகம் நல்கும் தென்பழனித்தியாகன் - தமிழ் ... [லே
கும்பமுனிக்கருள் நம்பெருமானவரக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்நீகுயி

சீலன்பரங்கிரிவா ழுமை பாலன்மெய்யன்பர்க்கெல்லா - மனு ... *
கூலன்கதிர்வடி வேலனிங்கேவரக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்நீகுயிலே

செச்சைப்புயத்தழகன் செந்தில்-பச்சைமயில்வீர - னிளங் ... *
கொச்சைக்குறப்பெண்ணை யிச்சித்தவன்வரக்-கூவாய்நீகுயிலே-வரக்கூவாய்

கள்ளவிழ்சோலைக்குகன் என துள்ளமெனும்பொருளை - முற்றும் ... *
கொள்ளைகொண்டஆநந்தக் கள்வனவரும்படிக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்

தஞ்சம்புகுமவரை என்று மஞ்சலென்பான்வயலூர - னெழிற் ... *
குஞ்சரிகேள்வனென் னெஞ்சுறைவான்வரக்-கூவாய்நீகுயிலே-வரக் கூவாய்

என்றனுயிர்க்குயிரைச் செம்பொற் குன்றவில்லிக்கிறைவைய - செழுங் ... *
குன்றுகடோறுமே நின்றவிசாகனைக்-கூவாய்நீகுயிலே-வரக்கூவாய்நீகுயிலே

ஒப்பிலோர்பெண்முருகா வென்னைச் செப்பருங்கைகொடுத்தோ - னீரேழ்...*
குப்புகழுந்தில்லைச் சுப்பிரமண்யனைக்-கூவாய்நீகுலே-வரக் கூவாய்நீகுயிலே*

குயிற்பத்துக்கண்ணி - முற்றியது.

வேலுமயிலுந்துணை.

## இரங்கல் _ விருத்தம்.

விரும்படியாரகத்திலுறைமுக்கணனுலெரிந்தமதவேள்கைமுல்லை *
யரும்படியாபடமுடிவதில்லையென்செய்கேனெல்லாமறிந்தமாசித் *
தரும்படியாக்கலையுணர்ந்தவஞ்சியரோ தென்பழனிச்சாமியிங்கே ...*
வரும்படியாச்செய்யவொருமையிலையோமருந்திலையோவழுத்துவீரோ. (௧)

அரும்பாவினஞ்சொலுஞ்செந்தமிழ்வாணர்புகழ்பழனியண்ணல்பாற்போஞ் *
சுரும்பாவிகொடுப்பதெங்கே பிழைப்பதெவ்வாறரிவையரோசொல்வீரிந்தப் *
பெரும்பாவிமதன்சமர்த்தையென்சொலுகேனுலும்பிடித்தவில்லும் ... *
இரும்பாவிக்கொடியாதா வொருநொடிக்காயிரங்கணையிங்கெய்கின்றனே.()

இடும்பாலையென்றுணராச்சூர்தடிந்தோன்பழனிவெற்பிலிளஞ்சூடாகச் ... *
சுடும்பாலைக்கொதிக்குதெனச் சினுங்குவளையோவொருவர்சொலுஞ்சூதுங்க*
வடும்பாலையறியாளே வடைவையும்வெப்பஞ்சகிக்க மாட்டாதோடுங் ... *
கொடும்பாலைவனந்தனிலெவ் விதநடக்கச்சகிப்பளிளங் கோதைதானே. (௩)
அனங்கனியாரமுதும்வெம்பாய்வெறுத்துக்கலைவளையுமணையுந்தோற்றண் *
முனங்கனியா யச்சிலைவேள் பொருகணையால் மூர்ச்சிக்குமூர்ச்சைதீர ... *
வினங்கனியாவிக்குணது வரவுகளைத்தாரகம்வார்த் திருக்குதையோ ... *
மனங்கனியாதாவிமயவல்லியுதவியபழனிமலையுளானே. ... (௪)

அத்தனையோர்கணையில்வெலு மதப்பயலூரானை வந்தாலஃதெனக்கோர் *
தத்தளையோகொடும்பாவி பாங்கியர்தாமுதவியுண்டோ தயையிலாக்கஞ் *
சத்தனையோவெனைப்புவியி லிப்படியும் படைப்பானே தனித்தநாளில் ... *
எத்தனையோதரஞ்சொலினும் பழனிமலைவேலர்மன திரங்கிலாரே ... (௫)
மனங்கனம்பாலனமுனைத்தும் வாராதவேலர்முன்போய் மடமாதுக்கு ....*
முனங்கனம்பால்கனைத்தூட்டக் கடைவாயால்வழிந்ததெனமொழியநெஞ்சம்
இனங்கனம்பாலுடையவர்கட்கெவர்சொல்வாரையோவீன்றெடுத்தநாளில் *
அனங்கனம்பாலுண்டொருதத்தென்றுரைத்தாரிலைக்கணிதம்ஆய்ந்தோர்தாமே.

சுமைப்போதாலெறியுமிந்தமதப்பயலாலுயிரிழக்கத்தொல்வேதத்தோன் ...*
அமைப்போதாதியரோகித்தென் பழனிப்பதியாளுமயில்வேற்கந்தர் ... *
தமைப்போதாவுயிர்ப்பிச்சையென்றிரப்பதில்லையவர்தமைக்காணுதிங்... *
கிமைப்போதாயிரங்கோடியுகமாகவிருக்குதிதற்கென்செய்கேனே (௭)
வெல்லுவாரைக்காணேன் மதப்பயலைத்தென்மலைவீழ்ந்திடவேவேளைக் *
கல்லுவாரைக்காணேனுலகுதனிற்குயிலினத்தைக்கதிக்கொட்டாமற் ...*
கொல்லுவாரைக்காணேனலதென்மனக்குறையையெல்லாங்கூர்ந்துநன்றாய்ச்
சொல்லுவாரைக்காணே னமரர்தொழும்பழனிமலைத் துரைக்குத்தானே. (௮)

இரங்கல் - விருத்தம் - முற்றியது.

வேலுமயிலுந்துணை.

## இணையாசிரியவிருத்தம்.

பூமேவுமதிவதனமுங்கருணைநயனமும் புன்னகைப்பவளவாயும் ... *
பொருவேலிலங்குதோளுந்தண்டமுறுகராம்புயமுங்கவான்கொள்சரமும் *
தேமேவுநீபமுமுன்னூலுமணிமார்புஞ்சிறந்தகிளுடைமருங்குஞ் ... *
சீரார்மறைச்சிலம் பொலிபதமுமேழையேன் சிந்திக்கவருள்புரிகுவாய் ...*

காமேவுவள்ளிக்குவாய்த்தநீஷேபமே கதிர்விரிமணித்தீபமே ... *
கங்குல்பகலற்றவுயரின்பநிலையேவும்பர் கண்களிகொடங்கமலையே... *
பாமேவுசெந்தமிழ்ப்புலவரோறேதொழும் பத்தர்பெறுமுரியபேறே ... *
பழநிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௧)

பொங்குகிரவுஞ்சமொடுதாருகன்முதற்றகுவர் பூண்டற்றிடக்களைந்தேழ் ... *.
புணரியையுமுண்டிந்திரன்றளைதறித்தரும் புலவனுக்காகவெற்பை ... *
யங்கிமைப்போதிற்பிளந்தும்பர்முதலினோ ரியார்க்குமிடர்நீக்கியுலகி ...*
லரியபுகழ்கொண்டநின்வேலினுக் கெளியன்வினையைத் தடிந்திடலருமையோ
சங்கமுறுமறிஞர்தரமங்கணவில்வாணனே தணவாதபிரமாணனே *
சச்சிதானந்தபரிபூரணவிலாசனே சகலபண்டிதராசனே ... *
பங்கயனைவன்சிறைசெய்சர்வாதிகாரனே பழமறைசொல்காம்பீரனே *
பழநிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௨)

பொல்லாவடற்சினப்புலியுமதகளிறுமலை புலனைந்தலைப்பாந்தளும் ... *
போராடுமேடனைப்பேய்களுமுலுத்தமுட் பூதலுமகலாதுசெறியும்... *
அல்லாரொன்மனமென்னும் வெங்காட்டினிடைமுன்ன மவுணவெங்காடழித்த
அயிலேந்திவேடர்மானிபவணங்கிவர்களூட னரியவனமயிலில்வருவாய் *
எல்லாமுன்வல்லவொரு சித்தனருள்சித்தனே யென்றுமழியாநித்தனே *
எவ்வுயிர்களுக்குமுயி ராயுறையுமேகனே யிலகுபன்னிருவாகனே... *
பல்லாயிரங்கோடி யண்டவாபரணனே பரகதிதருஞ்சரணனே ... *
பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௩)

இருப்புமுட்களைவிழிக ளிற்செருகியும்முடலையெரியுநெய்க்கொப்பரையில்விட்
டெட்பொரியெனப்பொரித் துங்கழுவிலேற்றியு மெருக்காணமிட்டரைத்துந்
திருப்புருநிரையத்துண் மூழ்த்தியும்மிவ்விதத் தியதண்டங்களெல்லாஞ் *
செய்வனுமறலியவனெம்மையணுகாதுன் றிருத்தாளளித்தாளுவாய் ... *
அருப்பமுறநடுவனையுதைத்தவர்குமாரனே யடலயில்கொண்மயில்வீரனே *
ஆபச்சகாயனே திகழ்கார்த்திகேயனே யருண்மேவுகாங்கேயனே... *
பருப்பதந்தோறும்விளை யாடல்புரிவேலனே பன்னுபிரணவமூலனே ...*
பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௪)

சொந்தமனைமைந்தர்தாய்தந்தையுறவின ரிவர்கள்சுடலைமட்டலதுயிர்க்குத் *
துணையாகவருவரோ ஐயநின்றாளைத் துதிக்கினற்றுணையாமெனச் ..., ...*
சந்ததமுரைத்துமவ்வுரையைத்தடுத்திந்திர ஜாலவித்தைகள்காட்டியென் *
றனையுந்தன்வசமாக்கு மிப்பாழுமனதையென் றன்சொல்வழிநிற்கவருள்வாய்
முந்திவகிலாண்டகோ டிகளைப்படைத்திட்ட முதல்வனேநிறைசெல்வனே *
முத்திக்குவித்தாய்முளைத்தொளிர்விசாகனே முடிவிலாச்சிவயோகனே *
பந்தமறவருணகிரியார்க்கருளுநாதனே பரைமுத்தமிடுபாதனே , ... *
பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௫)

உரமலிசிருட்டிதொட்டிதுகாறுமெண்ணில்பலவுருவமதெடுத்தெடுத்தோ ... *
ருசலைப்போலங்குமிங்குமயர்வுற்றயர்ந்துழலுமிக்கடையனேனைத் ... ...*
தரமருவுமானிடப்பிறவியில்விடுத்துச்சதாநந்தவாழ்வுதருநின் ... *
சரணந்துதிக்கப்பணித்தநின்றிருவருள்தழைத்தென்றும்வாழிவாழி ... *
பிரமநிலைகாட்டுமொளியேபூதமைந்தும்பிறப்பிடமதானவெளியே ... *
பேதமுறுசமயங்கடோறுநிறைசோதியேபேச்சற்றசொற்காதியே ... *
பரமர்மகிழ்சுகவாரியேபவக்கோடையைப்பருகவரும்அருண்மாரியே ... *
பழநிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவுபழனியங்கிரிமுருகனே... ...(௬)

பூதமுதனாதநாதாந்தமாய்ப் போதமாய்ப் போதாந்தமாயெங்கணும் *
பூர்த்தியாஃதுபொருளெனச்சொலினதற்குமேற்பொருளாய்ச்சுகானுபவமாய்
வேதமுதலியகலைக ளோதுதற்கரியபர வெளியாயவ்வெளியிலொளியாய் *
மெய்யன்பராடுமோனந்தமாக்கடலாய் விளங்குநினையறியவசமோ... *
ஏதமறவைந்தொழி னடாத்துமதிகாரனே யிகலசுரசங்காரனே ... *
இணையினவவீரர்குற்றேவல்புரிதாளனே யெழில்வள்ளிமணவாளனே *
பாதநிழலுயினேற் கருள்செயும்புண்ணியனே பாலசுப்பிரமண்ணியனே *
பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௭)

# அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

மதியிரவியொளிமுனல கிருளெதிர்க்குமோநின்பேர் வழுத்துமென்முன் *
கொதியனலாதிய பிணிகளெதிர்ந்திடுவ தென்னேயிக்குறைதீர்த்தாளாய் *
நதியணிவேணியர்பாகத் துமையருளைங்கரன்றுணையே நல்லோர்வாழ்வே *
கதிமுளையைவீசுறுமெய்ஞ் ஞானவித்தேபழனிமலைக்கந்தவேளே. (௧)

அண்டரியவடவையெனும் பேரனன்முன்கிடவின மண்டுமோமுன் ... *
பண்டர்தமைக்காத்தவடி வேலிருக்கவென்முன்வினை யணுகனன்றே *
தொண்டர்தமைக்காப்பதற்கே கங்கணங்கட்டியதோகைத்துரங்காநீல *
கண்டமுறுமருட்கடற் கண்வருமமிர்தே பழனிமலைக்கந்தவேளே ... (௨)

ஒருதுகளுமில்லாவச் சிரமதைச்செல் லரியாவென்றோர்ந்தெந்நாளு *
மிருதுறுநின்றிருநீறே புனையுமெளியேனைவினை வெருட்டலென்னே *
விருதுறுசூர்க்குலமுழுது மறக்களைந்தவேலரசே விரும்புமன்பர் ... *
கருதுமுனம்வருசமயசஞ்சீவியே பழனிமலைக்கந்தவேளே ... (௩)

பருத்திமிகுபொதிமலைபோ லாயினுந்தீப்பொறிபடுமுன் பலியாமாபோல் *
விருத்தியுறுவினைகளுன்ற னடியர்முனம்பொடிபொடியாய் வீந்திடாதோ *
வருத்தியடியே னையடரிடரொழியத் திருவுளத்தில் வைப்பாயன்பர் ... *
கருத்தினிலெண்ணிய வளிக்குங்கற்பகமே பழனிமலைக் கந்தவேளே... (௪)

ஒதருக்கன்மீதிருந்தும் புனியடருமோநின்று ஞறுமென்சென்னி ... *
மீதலர்ந்துமேமைழுதனை வினையடர்வதென்னேயோ விமலவேலா ... *
சீதமலர்க்குழற்கடவுட் பிடியும்வனமானுநிதஞ் சிந்தையோவாக் ... *
காதலுறுமின்பசுக வாரிதியேபழனிமலைக் கந்தவேளே. ... (ரு)

அடலுறுவாளரிமுறைமுன் வேழமெதிர்ந்திடுமோநின் னருளேவைப்பாய்த் *
திடமுறநெஞ்சிருத்துமன்பர் பதத்தூளிமுடிக்கணியுஞ் சிறுநாயேன்முன்... *
படமுறுவன்கோளும்விட மும்பிணியுமெதிர்ந்திடுமோ பகர்தியைய ... *
கடமுனிவனகத்தெள்ளிருங் குருமணியேபழனிமலைக் கந்தவேளே, ... (சு)

திவலையெறிகடற்றுயின்மா லூர்தியின்முன்கரளவினஞ் சேருறுப்போல் ...*
மூவலையறுத்துன்சரணம் போற்றுமன்பர்முன்வினைகண் மொய்த்துறுவே...*
குவலையமெலாநடுங்க வரசியற்றுஞ்சூர்க்கஞ்சிக் குடிபோமும்பர் ... *
கவலையறவேலெறிந்த சேவகனேபழனிமலைக் கந்தவேளே ... (எ)

மலிதிரைமோதுங்கடனீ ரினையெறும்புகலக்குவதோ வரத்தின்மிக்கோர் ...*
மெலிவகற்றும்ஆறெழுத்தை யுன்னுமெனைவினைகலக்க விதியுமுண்டோ ... *
வலிகொள்கிரவுஞ்சமலை நீறுபடவேலெறிந்த வானோர்வாழ்வே ... *
கலியுகத்திற்கண்கண்ட தெய்வமேபழனிமலைக் கந்தவேளே. ... (அ)

விலங்கலைவிண்டெறியுலவைக் கெதிர்மசகமுறுவதுண்டோ விபுதர்க்கென்று
நலங்கிளரச்செயுமுனதா ளகத்திருத்துமென்னைவினை நண்ணலென்னே ... *
நிலங்கதறமலைமுழைக்குட் சிக்குமொருதமிழ்ப்புலவ னிலைகெட்டுள்ளங் ... *
கலங்கியவேளையிற்காத்த சிவக்கொழுந்தேபழனிமலைக் கந்தவேளே ... (கூ)

வருணமுறும்வடவரையை யலைப்பவருண்டாமெனினும் வாழ்த்தியன்றன் *
அருணமலரடிக்கடிமை யாமவரைக்கோள்களெதிர்ந் தலைப்பதுண்டோ ... *
தருணவளமாருது தொண்டரொனுமுயிர்ப்பயிர்க டழைப்பநாளுங் ... ...*
கருணைமழைபொழிகடவுட் பெருமுகிலேபழனிமலைக் கந்தவேளே. ... (ய)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம் - முற்றியது.

## மாதரைப்பழித்தல்.

கட்டளைக்கலித்துறை.

கஞ்சமலரை வடுவைமறியைக் கணையைவண்டை ... ... *
வெஞ்சமனைப்பணி கொள்விழிமாதர் விரகத்திலே ... *
நெஞ்சமழுங்கிய நாயேற்குநின்பத நேரிடுமோ ... ... *
தஞ்சமென்பார்க் கருளும்பழனுபுரிச் சண்முகனே... ... (க)

பச்சிலையிட்டு முகத்தைமினுக்கிய பாவையர்தம் ... .... *
எச்சிலையுண்டிடு நிர்மூடனுக்கு மிரங்குவையோ... ... *

கைச்சிலைகொள் ளைவர்தூதனடர்கோக் கணங்கண்முன்னாய் ... *
யச்சிலையேந்து மரிமருகாபழ னிக்கரசே. ... ... (௨)

வீறானபுண்ணைத் தசைக்கட்டியையல்குன் மென்கொங்கையென் ... *
றாறுமயக்கிற் புகழ்ந்துமின்னார்கட் கடிமைசெய்யு ... ... *
மாறானநெஞ்சுடை யேற்குநின்பேரருள் வாய்ப்பதுண்டோ ... *
நீறாகச்சூரைப் பொடித்துப்பழனியு ணின்றவனே. ... ... (௩)

பருத்ததனத்தியர் செய்யுங்கலவிப் பழக்கத்திலே... ... *
கருத்தழிவேற்குநின் பொற்றாள்கிடைத்திடுங் காலமுண்டோ ... *
திருத்தமிகுமெயினக்கொடிக்காகத் தினைப்புனத்தில் ... *
விருத்தவுருக்கொண்ட தென்பழனாபுரி வேலவனே. ... ... (௪)

ஒருதனங்காட்டிப் பசப்பியிளைஞரை யுள்ளிழுத்தே ... *
வருதனங்கைப்பற்று மின்னாருறவை மறப்பதென்றோ... ... *
விருதனமூரு மயனெழுத்தைத்தட்டு மெய்யடியார் ... *
கருதனம்பாலிக்குந் தென்பழனாபுரிக் காவலனே. ... (௫)

சரியுமலர்க்குழன் மின்னார்மயக்கினிற் சார்ந்தலைந்தே... ... *
திரியுமிப்பாவிநின் றாட்டாமரைக்கன்பு செய்வதுண்டோ... ...*
அரியுமயனு மறியாவொருவர்க் கரும்பொருளைத்... ... *
தெரியும்படிச்செய்த தென்பழனாபுரித் தேசிகனே. ... ... (௬)

காணாவிடத்தொன்றுங் கண்டொன்றுஞ்சொல்லுங் கபடிகட்கான்... *
வாணாளையொப்பித் திடுவையென்றென்னை வருத்தலையே ... *
பூணாகச்சேடனைச் சுற்றிடுமாலனீ பொழிலுயர்ந்து ... ... *
சேணாடருக்கயர் வோட்டும்பழனியெஞ் சேவலனே ... (௭)

பத்தமில்லாக்கொடு நெஞ்சுடைவஞ்சியர் பாழ்ங்குழிக்கே ... *
சித்தமுருகிய நாயேற்குநின்பத சேவையுண்டோ ... *
சித்தரிருடியர் கின்னரர்பூசுரர் தேவர்நரர் ... ... *
நித்தமிறைஞ்சும் பழனாபுரிவளர் நின்மலனே. ... ...(௮)

போழ்ந்திடும்வேற்கண் ணரிவையர்மோகப் புணரியுளே ... *
யாழ்ந்திடும்போதுநின் பாதாம்புயத்தினை மறவேன்... ...*
சூழ்ந்திடும்பூத கணங்கள்விருந்துணச் சூர்ப்படைகள் ... *
வீழ்ந்திடவேல்விட்ட தென்பழனாபுரி வேலவனே. ... (௯)

ாழுஞ்சுரிகுழல் வஞ்சியர்மோகச் சமுத்திரத்தில் ... ... *
ழும்படிக்கென்னை முந்துறுநாளில் விதித்தனையே ... ...*
ாழமவுணக் களைபறித்தும்ப ரெனும்பயிர்வின் ... ... *
ழும்படிக் கயிலேந்தும்பழனிச் சுடர்க்கொழுந்தே ... (௧௦)

றல்லைநகைவைத்த மின்னார்மயலுக்குண் மூழ்கல்விடுத் ... ... *
தொல்லைமனநின் சரணம்புயத்தி லுறுவதென்றோ ... *

கல்லையெறிந்தவர்க் கில்லையென் றோது கதியருளுந் ... ... *
இல்லைவனத்த ரருள்பழனாபுரிச் சேவகனே. ... ... (கக)

பொட்டிட்டுமையிட்டுப் பித்தளையோலை புதுக்கியிட்டெட் ... *
டொட்டிட்டழைத்து முயக்குமின்னாரை யொழிவதென்றோ ... *
சுட்டிட்டமான்றசை தேன்கூட்டியுண் குறத் தோகைக்குளங் ... *
கட்டிட்டங்கொண்டசு சீலாபழனிக் கலாதரனே. ... (கஉ)

நரகத்துறைநெறி காட்டுமடநடை நங்கையர்தம் ... ... *
விரகத்துழலுங் கொடியேற்குநின்பத வீடுளதோ ... ...*
கரகத்துதகங் கவிழ்த்தார்க்கிளையவென் கண்மணியே ... ... *
உரகத்துடல்கிழித் தாடும்பழனி மயூரத்தனே... ... (கங)

வெறியார்கலவைக் குழம்பணிபூண்முலை மெல்லியர்க்கே ... *
முறியாக்கிடந்துழல் வேற்குநின்பாத முளரியுண்டோ ... ... *
உறியாரளையுண்ட வன்மருகாசெறி பூகங்களும் ... ... *
அறியாநெடும்பொழில் சூழ்பழனாபுரிக் காதிபனே. ... ...(கச)

மாதரைப்பழித்தல் - முற்றியது.

வேலுமயிலுந்துணை.

## அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

திருமருவுகரகமலத் தேந்தியருமறையொலிக்குஞ் செம்பொற்றுளை *
அருமையுறக்கண்ணிலொத்தி மகிழ்வுறுமைங்கரற்கிளைய வருங்குருந்தே *
இருமைவினைச்சடமொழியாமுன்னமயின்மீ தினில்வந்தெனையாட்கொள்வாய்
குருமணியேதவப்பேறே தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (க)

ஆலமெனத்தாலுவுஞ்செவ் விதழுமெயி றுங்கறுத்திட் டைமேலுந்தி *
பாலமுராங்களமும் வியர்த் துச்சியிற்குடெழுந்தாவி பதைப்புறுமுன் *
நீலமயின்மீதினில்வந் தஞ்சலெனக்கடையேற்கோர் நிலைதந்தாளாய் ... *
கோலமணிமேடைகள்சூழ் தென்பழனியம்பதிவாழ் குமரவேளே... (உ)

உடலமெலாமல்லியின் றண்டெனச்சில்லிட்டைய னெனவுரைக்குநாடி *
படபடத்தம்பரத்தாடிச் சுழித்தொடுங்கியுயிர்விடுமுன்பகர்மெஞ்ஞான *
அடலயில்வேலேந்திவந்திவ் வடிமைதனையஞ்சேலென்றாதரிப்பாய் *
குடவளைமுத்தொளிர்வயல்சூழ்தென்பழனி யம்பதிவாழ்குமரவேளே. (ங)

முடிசோர்ந்துவண்கமல முகஞ்சோர்ந்துவிழிசோர்ந்து மொழிசோர்ந்தீரங்*
குடியார்ந்துள்ளனலைவிந்திட் டுயிர்விடுமுன்றோகைமிசைக்குருதிவேலுங் *
கடியாரும்பதினொருவர்படைகளுந்தாங்கிக்கடையேன் காணவந்தாள் *
கொடியாடும்பொன்னெயில்சூழ்தென்பழனி யம்பதிவாழ்குமரவேளே. (ச)

அண்டரியநெடுஞ்சுவாசமும் வாய்வழிநின்றெழுந்துடலை யலைத்தலைப்பத் *
துண்டமதுசிதளித்துக் கண்ணிலைக்கண்ணிட்டாவி சோராமுன்னம் *
அண்டர்தொழும்வள்ளிதெய்வ யானையுடன்மயின்மேல்வந் தாதரிப்பாய் *
கொண்டறவழும்பொழில்சூழ் தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (௫)

வாரமுதனவத்துவாரமு மடைந்துவிக்கலுண்டாயத ... *
தேகநடுக்குதலோடு மூர்ச்சையுமே லாடியுயிர் சிதையாமுன்னம் ...*
மாகனக வெற்பதிர நடம்புரியுந் தோகைமிசை வந்தாட்கொள்வாய் *
கோகனகத் தடம்புடைசூழ் தென்பழனி யம்பதிவாழ் குமரவேளே. (௬)

தம்பமென விவ்வுடலந் தரையில்விழுந் தறிவுமங்கித் தாதுவும்போய்ச் *
செம்பதுமமுகக்களையு நீங்கியுயி ரோகாமுன் றிகழ்மயூரத் ... *
தும்பர்தொழும் பதச்சேவை தந்திந்தக் கடையேனை யுய்யக்கொள்வாய் *
கும்பமுனிக் கருள்புரியுந் தென்பழனி யம்பதிவாழ் குமரவேளே. ... (௭)

நெஞ்சளவுங்கபநிறைந்து மார்புயர்ந்துநெறிதளர்ந்து நிமைசேர்கண்கள் *
பஞ்சடைந்தைம்பொறிகலங்கிப் பதைத்தாவியேகுமுனம்பரிவுகூர்ந்தே ...*
செஞ்சதங்கைகொஞ்சுமலர்ச்சேவடியை நாயடியேன்சென்னிவைத்தாள் *
குஞ்சரங்க டிரிவரைசூழ் தென்பழனி யம்பதிவாழ் குமரவேளே. (௮)

காடிமுத லெதுவேனு நினைத்தவை யெலாங்கொடுமின் கையிற்சீய *
நாடியறவொழிந்ததெனப் பிடகர்கெடுவறைந்துமெல்ல நழுகாமுன்னம் *
ஆடியபைந்தோகைமிசை நொடிக்குள்வந்திவ்வேழைதனை யாதரிப்பாய் *
கோடிநவசித்தர்குலஞ்சூழ் தென்பழனி யம்பதிவாழ் குமரவேளே (௯)

மறைநவிற்றுநோய்க்குழுவு மூழ்வினையுங்கோளுமற்றெவ்வகைத்தாந்துன்பும்
பிறையெயிற்றுச்சமன்பயமுந்தொடாயேற்குனைவாழ்த்தும்பேறுநல்காய் *
நறையிருந்தும் பூங்கடப்பமணிமார்பாநின்றுமை நவில்வார்தங்கள் *
குறையகற்றி யருள்புரியுந் தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (௧௦)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம் - முற்றியது.

---

## ஊசல்.

மாமணிச்சிங்காரமண்டபத்தினூடே ... ... ... *
மன்னுகதிர்மாணிக்கக்கால்களுநட்டிச் ... ... ...*
சோமவொளிவயிரத்தால்விட்டஞ்சேர்த்துத் ... ... *
தூயபசுந்தங்கச்சங்கிலிகள்பூண்ட... ... ... ...*
சாமளநற்பலகைமிசைமகிழ்ந்திருந்தே ... ... ... *
தணியாம்பைமாதரெதிரெதிர்நின்றாட்ட ... ... ...*
மாமுகவர்க்கிளையவனேயாடீருசல் ... ... ... ... *
வையாபுரித்துரையேயாடீருசல் ... ... ... ...(௧)

ஆறுானனங்களிறு மருளேபொங்கி ... ... ... ... *
வாறிருதோளிலுங்கடம்பவலங்கலாடப் ... ... *
பாறுடுவேலொளிரமதாணியாடப் ... ... ... ... *
பைம்பொனுடைமருங்கிலங்கவிடைப்பூணுட ... *
பேறுரத்தருமுப்பயமலர்த்தாள்மீது ... ... ... *
பெட்புறுசிலம்பொடுசதங்கையாட ... ... ... *
மாறுதகருணையன்பர்பாலில்வைத்த ... ... ... *
வையாபுரித்துரையேயாடீருசல் ... ... ... ... (உ)

வெள்ளிமலைத்தநகைதையுளமகிட்சிபூண ... ... .. *
வேழமுகனெனுந்தமையன் மனம்பூரிக்க ... ... *
தள்ளியதக்கன்மகத்தையழித்திட்டோனுந் ... ... *
துணைவரொன்பதின்மருகின்றேவல்கேட்ப ... ... ... *
தெள்ளியர்சொல்லச்சுதனுமாமன்போற்ற ... ... *
திசைமுகமைத்துனன்பணிந்துகரங்கள்கூப்ப ... ... *
வள்ளிதெய்வயானையிருமருங்குமேவ ... ... ... *
வையாபுரித்துரையேயாடீருசல் ... ... ... ... (ஙு)

நற்றுயெனும்பனைபுங்கங்கையென்னு ... ... ... *
நறுஞ்செவிலித்தாயுமாசேர்வதிக்க ... ... ... ... *
பொற்றமனைக்கோயில்மாமியோடு ... ... ... *
புலமைமிகுதங்கையுமேபுகழ்ந்துவாழ்த்த ... ... ... *
முற்றுதமுகின்முலையிந்திரையுந்தெய்வ ... ... ... *
முனிவரர்பத்தினிமாருமாலமேந்த ... ... ... *
வற்றுதவானந்தக்கடலேயெங்கள் ... ... ... ... *
வையாபுரித்துரையேயாடீருசல் ... ... ... ... (ச)

ஞாலமெலாம்படைத்தவரேயாடீருசல் ... ... ... *
நாதாந்தத்துறைபவரேயாடீருசல் ... ... ... *
வேலணியும்விக்ரமரேயாடீருசல் ... ... ... ... *
விண்ணுலகங்காத்தவரேயாடீருசல் ... ... ... *
நீலமயில்வாகனரேயாடீருசல் ... ... ... ... *
நித்தியகல்யாணரேயாடீருசல் ... ... ... *
வாலசுப்பிரமண்ணியரேயாடீருசல் ... ... ... ... *
வையாபுரித்துரையேயாடீருசல் ... ... ... ... (ரு)

ஊசல் - முற்றிற்று.

---

## கட்டியம்.

சந்தவிருத்தம்.

நதிமதியுமறுகுமணியிபமுகவனுளமகிழுநடமிடுமயூரா ... பராக்
அதிசதிகொணிருதனொடுகுலவடுதநிதவிடுபடவயிலெறியும்வீரா ... பராக்

ஆதிபொதியமுனிவனகவிருளொழியவாருமவுனசுகமருளுதாராபராக்
புதியதனிலுயர்பழனிநகரிலுறைகுகவமரர்பணியுமதிகாரா. ... பராக் (௧)

மண்டலமுமெண்டிசையுமண்டபகிரண்டமும் வணங்குபயபாதாபராக்
தண்டமிழரும்புலவர்புந்தியுணினைந்தவை தரும்பிரபலதாதா... பராக்
பண்டயர்சயிந்தனுழியஞ்சலென அன்புளை பகர்ந்தபிரபோதா ...பராக்
விண்டலநெருங்கியடரும்பழனியங்கிரி விளங்கவருநாதா ... பராக். (௨)

சித்தமலைவுற்றவடிமைக்குறுதிசெப்பவருதிவ்வியகுணாளா ... பராக்
வித்தகரியற்குறையுரைத்தவர்தரத்தைமுனம்விள்ளுதமிழாளா. ... பராக்
சுத்தபரதத்துவவெளிக்கொளிதழைத்திலகுதுய்யவருளாளா. ... பராக்
சித்தர்கணமிக்கடர்திருப்பழனிவெற்பிலுறைதெய்வமணவாளா. பராக் (௩)

கட்டியம் - முற்றிற்று.

---

௨

வேலுமயிலுந்துணை.

## அடைக்கலப்பத்து.

பொன்னேமணியே சுகக்கடலே பொருளேயருளே பூரணமே ... *
மன்னே மயிலேறிய தேவே வானோர்வாழ்வே யுயிர்க்குயிரே ... *
தன்னேரகன்ற முக்கணெம்மான் றனக்குக்குடிலைப்பொருளுரைத்த ... *
அன்னேபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௧)

பண்ணார்மொழிமங்கையர்மோகப் பவ்வத்தழுந்தி மயங்கியுனை *
எண்ணாதிருக்குஞ் சிறுநாயே னெனினுந்தடுத்தாட் கொளவேண்டுந் *
தண்ணார்கருணைப் பெருங்கடலே தமிழ்மாமுனிவன் குருமணியே...... *
யண்ணாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே ... (௨)

ஒப்பாகியநின் னன்பரைப்போ லுலகினடித்து நாட்கழித்த ... *
விப்பாவியைநீ யாண்டுகொள்ளா திருக்கினெவ்வா றினியுய்வேன் *
றுப்பாரிதழும் பிகைபுதல்வா சுருதிமுடிமீ துறைமுதல்வா ... *
அப்பாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே.... ...(௩)

கணியாவனந்தம் பிழைபுரிந்த கசடனெனினுந் தொண்டர்தமைப் *
பணியாமூடனெனினுமருள் பாலித்தெனையாட் கொளவேண்டுந் *
தணியாச்சினவை வேலேந்துந் தண்ணங்கருணைப்பெருமுகிலே ... *
அணியார்பழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௪)

இமிழ்மூவாசைச் சுழல்விசைகொண் டிழுப்பப்பவவே லையிற்சுழன்றே *
யமிழ்வேன்றனைநின் னருட்கலைசேர்த் தாளரவிடினிங் குய்வேனோ *
கமழ்பூங்கொன்றை வனையுமுக்கட் கருணைக்கடலினுதித்தசெழு *
மமிழ்தேபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௫)

இம்மாநிலத்தி லென்பிழைக ளெல்லாம்பொறுத்தே யெனையாண்ட ... *
பெம்மானேயிங் கினிவிடுத்தாற் பேயேனுய்யுந் தரமுமுண்டோ ... *
செம்மானளித்த மறச்சிறுமி திருக்கண்மலரு மெழிற்புயனே ... *
யம்மாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௬)

பொய்யார்புழுக்கூ டிதைச்சுமந்தைம் பொறிபோநெறியிற்சென் றுலகை *
மெய்யாய்நம்பி நாட்கழித்தவினையேன் றனையும் பரிந்தாள்வாய் ... *
மையாரயிற்கட் குஞ்சரிதன் மகிணுவடியார்க் கருள்சுகுண ... *
அய்யாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௭)

வித்தாகியசஞ் சிதமொழிந்தால் வினையேதுடலே ததற்குமன ... *
தைத்தானடக்க வேண்டுமெனச் சாற்றுஞ்சுருதி தனைக்கேட்டு ... *
மித்தாரணிக்கு ளதன்வசத்தா யிடர்பட்டுழன்று மயங்குகின்றேன் *
அத்தாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௮)

சிறியேன்புரிந்த பிழைபொறுத்துன் செய்யமலர்த்தாட் டுணைசேரு ... *
நெறியேதிருப்பி யாளுவையோ நீங்காநிரையத் தழுத்துவையோ... *
மறியேவனைய விழியுமையாண் மதலாய்நினது மனக்குறிப்பை ...*
யறியேன்பழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௯)

இருளேசமைந்த மலர்க்குழலார்க் கேவல்புரிந்தே திரிந்துழலு ... *
மருளேநிறைநெஞ் சுடையேனின் மலர்த்தாளிணைக்கென் றுரித்தாவேன் *
பொருளேயடியார் தவப்பேறே பொதியமுனிவற் கருள்புரிதண் ... *
ணருளேபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. ... (௧௦)

அடைக்கலப்பத்து - முற்றியது. ஆ௨ய.

## லாலிப்பாட்டு.

இராகம் - பைரவி - தாளம் - ரூபகம்.

தந்திமுகனுக்கிளைய கந்தனுக்கும் ...... லாலி ... *
சதுர்மறையின்மூலனுக்கும் மேலனுக்கும் ...... லாலி ... லாலி (௧)

கந்தமலர்ப்பாதனுக்கும் நீதனுக்கும் ...... லாலி ...... *
கதிதருகாங்கேயனுக்கும் தூயனுக்கும் ...... லாலி லாலி (௨)

சீலனுக்குஞ்சிவகாமி பாலனுக்கும் ...... லாலி ...... *
தென்பழனியூரனுக்கும் தீரனுக்கும் ...... லாலி லாலி (௩)

வேலனுக்குந்தருவர்குல காலனுக்கும்...... ... லாலி ...... *
மெய்யர்பவநாசனுக்கும் நேசனுக்கும் ...... லாலி லாலி (௪)

ஆறுமுகத்தையனுக்கும் மெய்யனுக்கும்...... லாலி ...... *
அத்தனுக்குங்கருணைபொழி நித்தனுக்கும் ......லாலி லாலி (௫)

கூறின்மெய்ச்சொரூபனுக்கும் நீபனுக்கும்...... லாலி ...... *
எழில்வள்ளிமோகனுக்கும் வாகனுக்கும் ......லாலி லாலி(௬)

குன்றெறிவிசாகனுக்கும் ஏகனுக்கும் ...... லாலி ...... *
குஞ்சரிசமேதனுக்கும் போதனுக்கும் ...... லாலி லாலி (௭)

வன்றிறல்கொளயிலனுக்கும் மயிலனுக்கும்...... லாலி ...... *
மதனிறைஞ்சுமழகனுக்குங் குழகனுக்கும் ...... லாலி லாலி(௮)

கண்ணேன்மகிழ்மருகனுக்கும் முருகனுக்கும் ...... லாலி ...... *
கங்கையருள்புதல்வனுக்கும் முதல்வனுக்கும் ... லாலி லாலி ௯

புண்ணியனுக்கும் வாலசுப்பிரமண்ணியனுக்கும் லாலி ... *
புலவனுக்கு முத்தொழில்செய் வலவனுக்கும் லாலி ... லாலி.(௧௦)

லாலிப்பாட்டு - முற்றியது - ஆ௦ ம.

## எச்சரிக்கை.

இராகம் - சகாநு, தாளம் - ரூபகம்.

துதியைங்கரன்றுணையாய்வரு தூயா கார்த்திகேயா... ... ...*
கதிதந்தருள்பழநுபுரிக் கந்தா - எச்சரிக்கை—(௧)

பண்ணூர்மொழிநயகுஞ்சரி பாகா வள்ளிமோகா ... ...*
தண்ணூர்பொழிற்பழநுபுரித் தலைவா - எச்சரிக்கை—(௨)

பரமர்க்குண்மையோதுங்குரு பரனே கிருபாகரனே... ... ...*
அருமைத்திருப்பழநுபுரிக் கரசே - எச்சரிக்கை—(௩)

கல்லாமனத்தவுணர்க்கொரு காலா வடிவேலா ... ... *
நல்லாருறைபழநுபுரி நாதா - எச்சரிக்கை—(௪)

குறுமாமுனிக்கருள்செய்யுமெண் குணனே சரவணனே ... *
துறவோர்புகழ்பழநுபுரித் தூயா - எச்சரிக்கை—(௫)

வாங்காதவெம்பவநோய்தெற மருந்தே சிறுகுருந்தே ... *
நீங்காவெழிற்பழநுபுரி நிமலா - எச்சரிக்கை—(௬)

பனிமாமலைப்பிடிதந்தருள் பாலா தண்டைக்காலா... ... ...*
முனிவோர்துதிபழநுபுரி முருகா - எச்சரிக்கை—(௭)

பசுமாமயில்மிசையாடிய பாதா குருநாதா ... ... ... *
சுசியோர்நிறைபழநுபுரித் துரையே - எச்சரிக்கை—(௮)

தறைமீதன்பர்க்கருளுந்தேவ தருவே சிவகுருவே ... ... *
மறைமீதொளிர்பழநுபுரி வரதா - எச்சரிக்கை—(௯)

ஆலஞ்செறிமிடற்றானருளையா வயிற்றையா... ... ... *
கோலஞ்செறிபழநுபுரிக் குகனே - எச்சரிக்கை—(௰)

வானோர்பெருவாழ்வேயென்கண் மணியே சுப்பிரமணியே ...
தேனார்பொழிற்பழனாபுரித் தேவே - எச்சரிக்கை - (யிக)
எச்சரிக்கை முற்றியது - ஆ யிக.

---

## மங்களம்.

இராகம் - அசாவேரி - சாபுதாளம்.

மங்களம் கருணைமதவேழமுகவன்றுணைவ ... ... *
மங்களம் பனிமலைமடந்தை பாலா ... ...*
மங்களம் சர்வபரிபூரணசுகானந்த ... ... ... *
மங்களம் பழனிமலைவாழும் வேலா.... ... (ஜெயமங்களம்)

மங்களம் சரவணோற்பவசிவகுமரகுருக ... ... *
மங்களம் வனமாலிமகிழு மருகா ... *
மங்களம் தேவகுஞ்சரிவள்ளிமணவாள ... ... *
மங்களம் பழனிமலைவாழு முருகா ... (ஜெயமங்களம்)

மங்களம் தைதியர்தங்குலகாலவடிவேல ... ...*
மங்களம் தேவர்கள்வணங்கு பாதா ... *
மங்களம் ஜனகாதியர்க்கருளுமுபதேச ... ... *
மங்களம் திருப்பழனிவாழு நாதா ...(ஜெயமங்களம்)

மங்களஞ்சகலாகிலாண்டகோடிக்கதிப ... ... *
மங்களஞ்சுருதிகளவழுத்து திபுரு ... *
மங்களஞ்சிவசுப்பிரமண்ணியகருணாலயா ... ... *
மங்களஞ்சிவகிரியில்வாழ் சரவணா ...(ஜெயமங்களம்)

## கீர்த்தனம்.

இராகம் - அசாவேரி - தாளம் - ஆதி.

பல்லவி.

தென்பழனிக்கந்தனுக்குச் செயமங்களம் ... ... எங்கள்
தேவியுமைமைந்தனுக்குச் ... ...சுபமங்களம்.

அநுபல்லவி.

அன்பர்துதிநேசனுக்கு அருள்பிரகாசனுக்கு ... ...
இன்பவிலாசனுக்கு எழிற்குமரேசனுக்குத் ... ... தென்

சரணங்கள்.

எங்கும்பிரக்கியாதனுக்குப் போதனுக்கு ... ... மங்களம்
இசைகொள்சங்கீதனுக்கு நீதனுக்கு ... ... ... மங்களம்
இங்கிதவினோதனுக்கு எவர்க்குமபேதனுக்குச் ... ... *
செங்கமலபாதனுக்குத் திகழ்சுவாமிநாதனுக்குத் ... ... தென்—(க)

ஓர்வளர்கெம்பீரனுக் குதாரனுக்கு ... ... மங்களம்
சேவற்கொடித்தீரனுக் கொய்யாரனுக்கு ... ... மங்களம்
ஆறும்வெற்றித்தாரனுக்கு அரனூர்குமாரனுக்குச் ... ...
சூரசங்காரனுக்குத் தோகைமயில்வீரனுக்குத் ... ...தென் — (௨)
மாறில்வெட்சித்தோளனுக் கன்பாளனுக்கு... ... மங்களம்
வள்ளிமணவாளனுக்கு வேளினுக்கு ... ... ... மங்களம்
கூறருங் குணாளனுக்கு குஞ்சரிகண்ணாளனுக்கு ... ... *
ஈறில்கிருபையாளனுக்கு ஏழைபங்காளனுக்குத் ... தென் — (௩)

மங்களம் - முற்றியது.

---

௨.

வேலுமயிலுந்துணை.

## ஆனந்தக்களிப்பு.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஆதி.

பல்லவி.

சரணஞ்சண் முகதேவா சரணம் ... ... சரணம்
சரணஞ்சண் முகதேவா சரண... ... ... ... *

அநுபல்லவி.

சரணஞ்சண் முகதேவா சரணம் ... ... இந்தத்
தருணந் தனிலெனையா தரித்தாள்வாய்சரணம். ... சரணஞ்

சரணங்கள்.

உம்பர்சகாயனே சரணம் ... ... ... ...தந்தைக்
கொருமொழி யுரைத்தசெவ் வாயனே சரணம் ... ... ... *
அன்பர்தநேயனே சரணம்... ... ... இன்னும்
ஆரணந்துதிகார்த்தி கேயனே சரணம் ... ...சரணஞ் (௧)
அம்பிகை பாலனே சரணம் ... ... ... தெய்வ
யானைவள்ளிமகிழ் லோலனே சரணம் ... ... ...*
கும்பன்சொன் மூலனே சரணம் ... ... ... ஒன்னார்
குடர்மாலைசூடும்வை வேலனே சரணம் ... ... சரணஞ் — (௨)
அருந்தோகைப் பரியோனே சரணம் ... ... ...நாளும்
அதிவளஞ் சேர்வையா புரியோனே சரணம் ... ... *
பெரும்புகழ்க் குரியோனே சரணம்... ... ... நாயேன்
பிழையெல்லாம் பொறுத்தாள்வாய் பெரியோனே சரணம் - சரணஞ் — (௩)

ஆனந்தக்களிப்பு - முற்றியது.

# போற்றித்திருவிருத்தம்.

ஐங்கரற்கிளவலாய வருணிறைகுருந்தே... ... ... ...போற்றி
துங்கமாமறைக்குமெட்டாத் தூவெளிக்கொளியே ... ... போற்றி
சங்கநமுறுமெய்யன்பர்தம்பெருமவாழ்வே... ... ...போற்றி
பங்கயச்செல்வமன்னும் பழனியெம்பரனே ... ... போற்றி. (௧

முதனடுவீறுமில்லா மூலகாரணனே ... ... ...போற்றி
கதமொளிச்சுடர்வேலேந்துங் கனைகழல்வீரா ... ... போறறி
மதசமயங்கடோறும் வரமருள்பவனே ... ... ...போற்றி
பதகனைத்தடித்தாட்கொண்ட பழனியெம்பரனே ... போறறி. (௨)

அல்லியந்தடங்கள்சூழும் ஆவினன்குடியோய் ... ...போற்றி
நல்லியற்கீரற்காகநகமுழை யிடித்தோய் ... ... போற்றி
மெல்லியலொருத்திவேண்ட மெணகரமளித்தோய் ... ...போற்றி
பல்லியங்கிள்ளைபர்டும் பழனியெம்பரனே ... ... போற்றி. (௩

சுத்ததத்துவந்தனந்த துரியமெய்யழகா ... ... ...போற்றி
முத்தர்சூழ்திருச்செங்கோட்டு முருகவிழ்கடம்பா ... போற்றி
சத்தசாகரஞ்சூர்வெற்புந தகர்த்தவேலிறைவா ... ...போற்றி
பத்தர்நெஞ்சகமாக்கொண்ட பழனியெம்பரனே .. போற்றி. (௪

அணிபழமுதிர்சோலைக்கு ளானந்தகனியே ... ...போற்றி
மணிதிக்கதிர்காமத்துண் மன்னுசிற்சுகனே ... ... போற்றி
தணிகையென்றுரைப்பார்வன்றோய் தணிக்குமபண்டிதனே ...போற்றி
பணிலமுத்திருளைநீக்கும் பழனியெம்பரனே ... ... போற்றி (௫)

விசுவநீடண்டமெல்லா மேனியாக்கொண்டோய் ... ...போற்றி
சசிதவிழ்குன்றுதோறுந் தனித்தனிநின்றோய் ... ... போற்றி
கசிவிலெனகன்னெஞ்சத்துங் கழலிணைவைத்தோய் ... ...போற்றி
பசுமயின்மிசைநடிக்கும் பழனியெம்பரனே ... ... போற்றி. (௬)

ஐந்தொழிற்கின்றவாபோற்றி யாண்டலைத்துவசா ... ...போற்றி
செந்திலவாழ்கந்தாபோற்றி திரிபுரைமைந்தா ... ... போற்றி
கொந்துறுவாகாபோறறி குஞ்சரிபாகா ... ... ...போற்றி
பைந்தமிழ்ப்புலவாபோறறி பழனியெம்பரனே ... ... போறறி. (௭)

விண்ணவர்விருந்தேபோற்றி வினைதெறுமருந்தே ... ...போற்றி
கண்ணினுண்மணியேபோற்றி கதிர்மணிக்குன்றே ... போற்றி
தண்ணருள்விளக்கேபோற்றி சரவணோற்பவனே ... ...போற்றி
பண்ணருஞ்சுவையேபோற்றி பழனியெம்பரனே ... போற்றி. (௮)

தேவர்கடேவாபோற்றி திருப்பரங்கிரியாய்... ... ...போற்றி
மூவர்கண்முதல்வாபோறறி முத்தியீத்தாளுய்... ... போற்றி

மாவளர்தோளாபோற்றி வள்ளிமணாளா... ... ... ...போற்றி
பாவலர்தலைவாபோற்றி பழனியெம்பரனே ... ... போற்றி. (கூ)

ஏரகத்தரனேபோற்றி யிசைசடாட்சரனே ... ... ...போற்றி
கூரயிற்கரனேபோற்றி கூதாளவரனே ... ... ... போற்றி
போரிலுக்கிரனேபோற்றி புகழ்தயாபரனே ... ... ...போற்றி
பாரருள்வரனேபோற்றி பழனியெம்பரனே ... ... போற்றி. (க0)

சென்னிமாமலையோய்போற்றி சிவகிரியப்பா ... ...போற்றி
என்னுயிரானாபோற்றி யேழைபங்களா ... ... ... போற்றி
சொன்னவானணியேபோற்றி சுப்பிரமணியே ... ...போற்றி
பன்னிருகரனேபோற்றி பழனியெம்பரனே ... ... போற்றி. (கக)

---

கருணையங்கடலேபோற்றி கண்ணுதன்மதலாய் ... ...போற்றி
தருணசஞ்சீவியேபோற்றி சண்முகத்தையா ... ... போற்றி
பிரணவவொளியேபோற்றி பிழைபொறுத்தருள்வாய்... ...போற்றி
சரணநின்சரண்ம்போற்றி சயசயபோற்றி .. ... ... போற்றி.

போற்றித்திருவிருத்தம் முற்றிற்று.

---

கொற்றமிகுமின் னயிலைமயிலைச் செங்குக்கிடத்தைப் ... ... *
பெற்றவுயர்புக ழைத்துதியாதற்பர் பேரினிதம் ... ... ...*
ற்றமிழ்க்குள்ளாரி தாகியபாவை நவின்றவென்றன் ... ... *
மெல்லாம்பொறுத் தாள்வாய்பழனிக் குருபரனே. ... ...*

தோத்திரமாலை - முற்றியது. ஆ செய்யுள் - ௩௭௩.

---

## கீர்த்தனை.

இராகம் புன்னாகவராளி - தாளம் ஆதி.

பல்லவி.

வேலிருக்கவினையுமுண்டோ — அஞ்சாதேநெஞ்சே ... *
வேலிருக்கவினையுமுண்டோ. ... ... ... *

அநுபல்லவி.

சேலிருக்குஞ்செங்கமல வாவிசூழ்பழனிமலைச் ... *
சேவலன்புகலருமகிலபுவன-காவலன்கரமலர்மிசையொளிர்வடி-வேலிருக்க

சரணம்.

ாலசுப்பிரமண்ணியதேவனே யுனக் கபையமபையமென ... *
லமிடுமும்பருய்யவே கணப் பொழுதினிலெழுதினை ... ... *
வலையக்கிரவுஞ்சனை தாரகனைச்சிங்கமுக ... ... *
ரனைக்கதிரொதிர்பொருசூரனொடு சூரனைப்பொடிபடவடுமெரிசுடர்—வேலி

கீர்த்தனை முற்றியது.

---

## கட்டளைக்கலித்துறை.

அத்திமுகவர்க்கிளையகுமாரனமரருக்காய்ச் ... ... ... *
சத்தியெனும்படைதாங்கியவீரன்றமிழ்முனிக்கு ... ... *
முத்திநிலையருள்வையாபுரிச்சண்முகன்சரணப் ... ... ...*
பத்திசெய்தொண்டர்முன்பேரனற்கீடமிப்பற்றலரோ. ... ... (க)

ஆதியிற்றெண்டணிந்நூலைத்திருத்தியச்சிட்டளித்த ... *
போதுமறிவையிப்போதுமறிவையிப்பொய்யர்மொழி... ... *
யாதலினூற்பழனிக்குமராஇவ்வரையர்மறு ... ... ... *
நீதிவழாதெளியேற்கின்பளித்திடநீயருளே. ... ... (உ)

சோதித்தச்சிட்டகுணபாடத்துள்வழுச்சொற்புகட்டிப் ... *
பேதித்ததற்குரையென்றொருபேரிட்டிப்பேயரெல்லாம்... ... *
வாதித்தனையார்முன்னுயேன்றனைநிற்கவைத்தனன்றே ... *
ஆதித்தனிமுதலேபழனாபுரிக்காதிபனே, ... ... ...(ங)

சினக்குமொன்னார்களெதிர்ப்பினுமென்னவித்தீமையர்தம் ... *
இனக்குழுச்சூழவிருப்பினுமென்னவிவர்கட்கஞ்சேன் ... ... *
வனக்குறவள்ளிமணாளன்பழனிமலைக்குமரன்... ... ... *
எனக்குத்துணைவடிவேலையனுப்புவனேழையென்றே ... ... (ச)

அன்பர்வினைத்தவையாவுமுடித்தன்னவர்க்கரிய ... ... ...*
இன்பமளிப்பதற்கோர்சித்தனுண்டவனெங்குளனேற் ... ... *
றென்பழனிக்குன்றில்வாழ்வோனெல்லாம்வல்லசித்தனுக்கு ... ...*
முன்பருளையனவன்றுடுதியெண்ணமுற்றுறவே ... ... (ரு

இப்புத்தகத்திற்கதிகாரந்தந்தெளியேனியற்றும் ... ... *
எப்புத்தகத்தையுங்காப்பாய்தரங்கமெறியுமுத ... ... ...*
திப்புத்தமிர்தமொழிவள்ளிபங்கவெந்தேவருனக் ... ... *
கொப்புத்தமஅன்பரன்பிலுதிக்குமயூரத்தனே. ... ... ...(சு

இன்றென் னிறைநீ நானின்றன் னடிமையென்ப ... ...
தின்றெவ ருங்காண வியற்றியவிந் - நன்றினுக்கி ...
யாதுசை மாறேழை புரிவேன் பழனிமலை ... ...
மீதுறை யுமனபர்வாழ் வே. ... ... ...

வெப்பனனஞ்சொத்தவொன்னாரொடுங்கவும்விஞ்சைகற்றோர் ...
ஒப்பிலைவர்க்குமிந்நூலெனக்கூறியுவப்புறவுஞ் ... ...
செப்பனவான்கொங்கைவள்ளிமணாளன்றிருப்பழனி ... ...
யப்பனருள்புரிந்தான்மகிழ்சிக்கடலாழ்ந்தனமே. ... ... (

கட்டளைக்கலித்துறை-முற்றியது.

வேலுமயிலுந்துணை.